1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Tele{grams: "CATHOLIC PRESS, JAFFNA.
Tele{phone: No. 100.

# சத்தியவேதபாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

79-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1954-ம் ஆண்டு ஆனி மாதம் 17-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 23-ம் இலக்கம்

## சுதேச வர்த்தமானம்

### காலநிலை

புயலைப்போன்று சோழகக்காற்று உரமாக வீசிக்கொண்டிருக்கின்றது. மழைக்கோலம் இடையிடையே காணப்படினும் மழையில்லை.

### தேவநற்கருணைத் திருநாள்

நம்முடைய ஆசனக்கோவிலிலே தேவநற்கருணைத்திருநாள் இம்மாதம் 20-ந் திகதியாகிய வருகிறஞாயிற்றுக் கிழமை கொண்டாடப்படவிருக்கிறது. அன்றுகாலை 7 மணிக்குப் பெரியபாடற் பூசை நிறைவேறும். சாயந்தரம்வேஸ்பர் பாடியதும் திவ்வியநற்கருணைநாதரின் திருப்பவனி ஆரம்பமாகி வழமைபோல ஞானஆடம்பர வைபவங்களுடன் நடந்தேறும். அன்பின் தேவதிவிய அனுமானமாகிய அதிபூசித திவ்விய நற்கருணையில் எழுந்தருளியிருக்கின்ற அன்பின் தெய்வீகஅரசர் திருப்பவனிகொள்ளவிருக்கும் வீதிகளை அவற்றின் இருமருங்கும் வசிக்கின்ற கத்தோலிக்கமக்கள் முன்போல அழகுறச்சிங்காரித்து, அவர்பட்டிலே தங்களுக்குள்ள வணக்கவழிபாட்டையும், அனந்தபக்திபற்றுதலையும் பிரத்தியட்சமாகக் காண்பித்து, அவருடைய ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்வார்களாக!

### குருப்பட்டமும் கீழ்ப்பட்டமும்

றோமாபுரியிலே றெவியாறோ விசாரணைப்பங்குக் கோவிலிலுள்ள தங்கள் வேனிற்கால வாசஸ்தலத்திலே இலங்கையர்களான அமலோற்பவி சபைக் குருத்துவமாணவர்கள் ஆறுபேர் வருகிற ஆடிமாதம் 4-ந் திகதி ஞாயிற்றுக் கிழமை குருத்துவ கீழ்ப்பட்டங்களும், குருப்பட்டமும் பெறவிருக்கின்றனர். இவர்களிலே,

வண. கிறிஸ்ரி ஏ. ஜூவக்கீம்பிள்ளை, வண. ஜேம்ஸ் குக் எனும் பிறதர்மார் இருவரும் முதலாவது கீழ்ப்பட்டமும்,

வண. எம். பி. இராயப்பு, வண. ஜி. பி. அலவீனெஸ்எனும் பிறதர்மார்இருவரும் இரண்டாவது கீழ்ப்பட்டமும்,

வண. டால்ஸ்டன் போல்ஸ், மிக்கேல் றெற்றிக்கோ எனும் பிறதர்மார்இருவரும் குருப்பட்டமும் பெறவிருக்கின்றார்களென அறிகின்றோம்.

### வண. தனிநாயகம் சுவாமிகள்

இலங்கைச் சர்வகலாசாலைப் போதகாசிரியருள் ஒருவரான வண. சேவியர் எஸ். தனிநாயகம் சுவாமியவர்கள் கையெழுத்துப் பிரதிகளை ஆராயும்படியாக நடத்திவரும் தமது ஐரோப்பிய சுற்றுப்பிரயாணத்தின்போது, தமிழில் முதன்முதலாக ஐரோப்பியர் ஒருவரால் எழுதப்பெற்ற தமிழ்இலக்கண நூல்ஒன்று போர்த்துக்கால்தேச லிஸ்பன்நகர தேசிய நூல்நிலையத்தில் இருக்கக் கண்டறிந்திருக்கின்றார். "ஆட் கிறமறிக்கா" என்ற நாமத்துடன் எழுதிப் புத்தகரூபமாகக் கட்டப்பட்டுள்ள இந்தக் கையெழுத்துப்பிரதி இதுவரை கண்டுபிடிக்கப்படாமல் இருந்துவராலாயிற்று. இது 1555-ம் ஆண்டுக்குமுன் ஹென்றி ஹென்றிக்குவெஸ் எனும் யேசுசபைச்சுவாமியாரால் போர்த்துக்கேயமொழியில் எழுதப்பெற்ற-ஓர் தமிழ்இலக்கணமாகும் கொயம்பறநகரில் பிறந்த இந்நூலின் ஆசிரியரான சுவாமியார் ஐம்பதுவருடங்களாக இந்தியாவிலும், இலங்கையிலும் தமிழர்வசிக்கும் பகுதிகளிலே திருத்தொண்டாற்றியவரென்றும் தெரியவருகிறது. இவர் ஐரோப்பாவிலுள்ள தமதுநண்பர்களுக்கு எழுதிய கடிதங்களிலே தாம் அப்படிப்பட்ட ஓர் இலக்கணநூலை இயற்றியுள்ளதாக எழுதியிருக்கிறாரென்றும் தெரியவருகிறது. வண. தனிநாயகம் சுவாமியவர்கள் தற்போது றோம், பரீஸ், லிஸ்பன், லண்டன்நகர்களிலும், கிறீற்றிலும், சுற்றுப்பிரயாணஞ்செய்துவருகின்றார்.

### பிரதம மகிமைப்பட்டங்கள்

மகாராணியாரின் பிறந்தபெருநாளையிட்டு இலங்கையின் கவர்னர்-ஜெனறல் சோல்பறிபிரபு "வைக்கவுண்ட்" பட்டம் அருளப்பெற்றிருக்கின்றார். பாராளுமன்றப் பிரதிநிதிகள்சபையின் சபாநாயகர் திரு. அல்பேட் எவ். பீரிஸ் அவர்களும், செனற்றர் டபிள்யு. ஏ. பி. சொய்சா அவர்களும் நைற்பட்டமாகிய "சேர்" பட்டம் அருளப்பெற்றிருக்கிறார்கள்.

### சாம்பிராச்சிய மகிமைப்பட்டங்கள்

இம்முறை எலிசபேத் மகாராணியாரின் பிறந்ததிருநாளைமுன்னிட்டு இலங்கைப் பிரபலஸ்தர்களான 36பேர் சாம்பிராச்சிய மகிமைப்பட்டங்கள் வழங்கப்பெற்றிருக்கின்றனர். இவர்களிலே தமிழருள் வடமேல்மாகாண அரசாங்க ஏசன்றரான திரு. ஏ. அருள்பிரகாசம், எம். பி. ஈ. அவர்களுக்கும், பிரதமரின் உதவிக்காரியதரிசி திரு. பி. நடேசன் அவர்களுக்கும், உள்நாட்டுமந்திரி காரியாலய உதவிக்காரியதரிசி திரு. ஜி. பி. தம்பையா அவர்களுக்கும் ஓ. பி. ஈ. பட்டமும், பாக்குநீரிணையை முதன்முதலாக நீந்திக் கடந்தவரான திரு. முருகுப்பிள்ளை நவரத்தினசாமி அவர்களுக்குப் பி ஈ. எம். பதக்கமும் வழங்கப்பட்டுள்ளன.

### சுதேச மகிமைப்பட்டங்கள்

எலிசபேத் மகாராணியாரின் பிறந்த பெருநாளைமுன்னிட்டு இலங்கைப் பிரமுகர்களில் 40 பேர் சுதேசமகிமைப் பட்டங்கள் சன்மானிக்கப் பெற்றிருக்கின்றனர். இவர்களிலே தமிழருள் திரு. முருகேசு வைரமுத்து (கொழும்பு) திரு. அம்பலவாணர் அருளம்பலம் (யாழ்ப்பாணம்) எனும் இருவருக்கும் ஜே. பி. பட்டமும், திரு. ஆறுமுகம் செல்லமுத்து, எம். பி. ஈ. அவர்களுக்கு அதிகார்பட்டமும், திரு. கந்தையா துரையப்பா, திரு. முருகுப்பிள்ளை சண்முகம் கார்த்திகேசு, திரு. தம்பிமுத்து மயில்வாகனம், திரு. சின்னையா வெற்றிவேலு எனும் நால்வருக்கும் முகாந்திரப்பட்டமும் வழங்கப்படுள்ளன.

### நீதிபதிகளின் நியமனம்

திரு. ஸ்பென்சர் இராசரத்தினம் அவர்களிடமாகக் கொழும்புப் பிரதம மஜிஸ்றேற் திரு. பி. சிறீ ஸ்கந்தராசா அவர்கள் யாழ்ப்பாண டிஸ்திறிக் நீதிபதியாக நியமனஞ்செய்யப் பெற்றிருக்கிறாரெனத் தெரியவருகிறது.

யாழ்ப்பாணத்திலே ஓர்அத்வக்காத்தாகக் கடமையாற்றி வருகிறவரான திரு. ஜே. ஆர். இராசரத்தினம் அவர்கள் வருகிற ஆடிமாதம் 1-ந் திகதி தொடக்கம் ஓர் மஜிஸ்றேற்றாக நியமனஞ்செய்யப் பெற்றிருக்கின்றார். இவர் யாழ்ப்பாணப் பிரபல வழக்கறிஞரும், சமாதான நீதிபதியுமான திரு. ரி. சி. இராசரத்தினம், ஜே. பி., ஓ. பி. ஈ. அவர்களின் சிரேஷ்டபுதல்வராவர்.

சாவகச்சேரி, முடிக்குரிய வழக்கறிஞரான திரு. ஆர். டி. சிவகுரு அவர்கள் வருகிறஆடிமாதமுதல் வவுனியாக் கிராமக்கோட்டு நீதவானாக நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

### யாத்திரிகருக்கு மலிவுதிக்கெற்

மருதமடுத் திருப்பதியின் ஆடிப் பெரிய மகோற்சவத்தையிட்டு றெயில்வேமூலம் மூன்றாம்வகுப்பில் பிரயாணஞ்செய்யும் யாத்திரிகர்களுக்கு ஒற்றைச்சலாரிலும், அதிற் பாதியிலும் சென்றுதிரும்புதற்காக மலிவுதிக்கெற்றுகள் வழங்கப்படவிருக்கின்றன. இந்த ஆனி 28-ந் திகதிமுதல் ஆடி 2-ந் திகதிவரையிலே ஆங்காங்கு பலறெயில் வேஸ்றேஷன்களிலிருந்தும் மடுறோட்டுக்கு இந்தமலிவுதிக்கெற்றுகள் உதவப்படும். பின்னர்அவைகள் ஆடி 5-ந் திகதிவரையிலே செல்லும்.

### மூளாய்ச் சயரோக ஆஸ்பத்திரி

மூளாயிலே புன்னாலை-வட்டுக்கோட்டைவீதியில் சயரோகஆஸ்பத்திரி ஒன்றை மூளாய்க் கூட்டுறவுஆஸ்பத்திரிச் சங்கம் அமைப்பதையிட்டு மூளாய்வாசிகள் ஆட்சேபித்தமையாலே அவர்களின் விருப்பத்திற்கிணங்க அங்கே அதனை அமைப்பதில்லையென்று சங்கம் தீர்மானித்துவிட்டது. ஆயினும் அதனை அமைப்பதற்குத் தகுதியான ஓர் இடம் தெரியப்படவிருப்பதை எதிர்பார்த்து அதற்கென்று முப்பதினாயிரம் ரூபா ஒதுக்கப்பட்டிருக்கிறது.

### ஓட்டுத் தொழிற்சாலை

கல்லோயாவிலே மூன்றரைலட்சம் ரூபா செலவில் கட்டப்பட்டிருக்கும் ஓட்டுத்தொழிற்சாலையில் மாதம் ஒன்றுக்குச் சராசரியாக முப்பதினாயிரம் ஓடுகள்வீதம் செய்யப்படுகின்றன. இத்தொழிற்சாலையில் செய்யப்படும ஓடுகள் கொண்டு கீழ்மாகாணத்தின் தேவையைப் பூர்த்திசெய்ய முடியுமென்றும், அதன்மூலம் இந்தியாவிலிருந்து இறக்குமதிசெய்யப்படும் ஓடுகளைக் குறைத்துப்பிடித்துப் பெருந்தொகைப் பணத்தை இலங்கையிலேயே சேமிக்கலாமென்றும் காணிஅபிவிருத்திமந்திரியாரின் பாராளுமன்றகாரியதரிசி கூறுகின்றார்.

### யாழ்ப்பாணமும் மகாவலிகங்கையும்

புத்தூரில் நடைபெற்ற வலிகாமம் கிழக்குக் கமத்தொழிலாளர் கூட்டத்திலே மந்திரிமாரிடம் கமக்காரரின் தேவைகளைக்கோரி, திரு. க. சிவகுரு அவர்கள் பேசியபோது: கமக்காரருக்கு மின்சாரவசதிசெய்து நீர்ப்பாய்ச்சல்வசதி அளிக்கவேண்டுமென்றும், மகாவலிகங்கையை யாழ்ப்பாணத்துக்குத் திருப்பித்தர வேண்டுமென்றுமகேட்டு, அவ்வாறு மகாவலிகங்கையை யாழ்ப்பாணத்துக்குத் திருப்பிவிடும் வேலைக்கென ஆயிரம் தொழிலாளரின் உதவியைத் தாமபெற்றுத்தரத் தயாராயிருப்பதாகத் தெரிவித்துக்கொண்டார்.

### திரு. பி. ஜி. இம்மனுவேல், எம்.ஏ.

கொழும்பு, சஞ்சூசையப்பர் கல்லூரி ஆசிரியர்களில் ஒருவரான திரு. வஸ்தியாம்பிள்ளை கிறெகறி இம்மனுவேல் அவர்கள் சென்னைச் சர்வகலாசாலை எம். ஏ. பரீட்சையில் முதற்பிரிவிலே சித்தியடைந்திருக்கிறாரென அறிந்து சந்தோஷமானோம். இவர் பீ. ஏ. பட்டதாரியானபின் அச்சர்வகலாசாலையிலே கடந்த இருவருடகாலமாகத் தமிழில் ஆராய்ச்சி நடத்திவந்து எம். ஏ. பட்டம் பெறலாயினர்.

### மன்னாரும் வெங்காயச்செய்கையும்

மன்னார்ப்பகுதிக் கமக்காரர் தங்கள் வயல்களிலே தற்போது வெங்காயம், மிளகாய், புகையிலைபோன்ற பயிர்களைச் செய்கைபண்ணுவதில் பெரிதும் கரிசனையெடுத்து வருகின்றார்கள். இவ்வருடம் அப்பகுதியில் செய்கைபண்ணப்பட்ட சிறுபயிர்களில் வெங்காயமும், மிளகாயும் நல்லபலன் கொடுத்திருப்பதாகவும், பறப்பாங்கண்டல், விளாங்குளி, விடத்தல்தீவு ஆதியகிராமங்களில் புகையிலையும், மிளகாயும் நன்றாக விளைந்திருப்பதாகவும் சொல்லப்படுகிறது. சமீபத்திலே முருங்கனைச்சேர்ந்த கமக்காரர்ஒருவர் தனது வயலில் 4 றாத்தல் வெங்காயம்விதைத்து அதிலிருந்து 96 றாத்தல் வெங்காயம் பெற்றிருக்கின்றார்.

### இலங்கையின் அரிசித்தேவை

இலங்கையிலே உற்பத்தியாகும்அரிசி இந்நாட்டுமக்களின் தேவைக்குப் போதியதில் நூற்றுக்கு 49 விகிதமானதையே சமாளிக்கப் போதியது. அதனால் தேவைப்படும் அரிசியில் நூற்றுக்கு 51 விகிதமும் இன்னுமே இறக்குமதிசெய்யப்பட வேண்டியிருக்கிறதென்று உணவுஉற்பத்தித்தலைவர் திரு. மாணிக்க இடைக்காடர் 1953-ம் ஆண்டுக்கான தமது பரிபாலனஅறிக்கையிலே தெரிவித்திருக்கின்றார். தற்போதைய சனப்பெருக்கத்தை — அதாவது வருடம்ஒன்றுக்கு 313 532 வீதமான சனப்பெருக்கத்தைக் கவனிக்குமிடத்து, தினமும் ஏறக்குறைய 875 பேருக்கு மேலதிகமாக உணவு தேவைப்படுகிறதென்றும் அவர் தெரிவிக்கின்றார்.

### மலாயாப் பிரசைகளா அல்லது

சிங்கப்பூரிலும், மலாய்நாட்டிலும் ஏறக்குறையப் பதினாயிரம் இலங்கை மக்கள் வசிக்கின்றார்கள். இவர்களுள் பெரும்பாலானோர் யாழ்ப்பாணத்தமிழர்களே. இவர்கள்அங்கு நெடுங்காலமாக அரசாங்கசேவையிலும், வியாபாரத்திலும் ஈடுபட்டிருக்கிறார்கள். இவர்கள்வருங்காலத்தில் இலங்கைப் பிரசைகளாக இருக்க விரும்புகிறார்களா, அல்லது மலாயாப்பிரசைகளாக இருக்கவிரும்புகிறார்களா என்பதை இப்போதே முடிவுசெய்யவேண்டும். இனிப்பாறியபிறகு இவர்கள்மீளவும் இலங்கைக்குத் திரும்பவிரும்புவார்களானால் என்னசெய்யவேண்டும்? தாங்கள் இலங்கைப் பிரசைகளாகவே இருக்கவிரும்புவதாக மலாயாவிலிருக்கும் இலங்கைஅரசாங்கப் பிரதிநிதியிடம் மனுச்செய்து தங்களைப்பதிவு செய்துகொள்ளவேண்டும். இல்லையேல் இவர்களிற்பலர் இலங்கைக்குத் திரும்பிவருவது கஷ்டமாயிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திரனில் தோன்றிய இருள்

பன்னிரண்டாம் நூற்றுண்டு. பெல்ஜியதேச லியேஜ்நகருக் கருகிலுள்ள சிற்றூர்ஒன்றில் ஒருபெண் பிறந்தாள். ஜூலியானுஎன்ற அவளுக்கு ஐந்துவயதானதும் அவள்பெற்றேர் இறக்கவே அவள் அகதியாக விடப்பட்டாள் கொர்னில்லோன்நகர கன்னியாஸ்திரிமார் அவளைஏற்று வளர்த்துவந்தனர். அங்குபக்தியுள்ளவளாய்அவள்வளர்ந்துவரும்போது கடவுள் தன்னைத் துறவறவாழ்க்கைக்கு அழைப்பதாக உணர்ந்தாள். அந்தஅழைத்தலுக்குச் செவிசாய்த்து அவரின் ஏவுதலுக்கு ஜூலியானு கீழ்ப்படிந்தாள். அவள் இன்னும் சிறுமியாய் இருக்கையிலேயே, கன்னியாஸ்திரிமார்செய்யும்கடின வேலைகளை அவளும்செய்ய விரும்பினுள். அதனுல் சாப்பியென்சியா (ஞானம்) என்னும் கன்னியாஸ்திரியின் பொறுப்பில் அவள் விடப்பட்டாள். அவள் சிறுமிக்குக் கவனமாகக் கல்வி பயிற்றி அவளைவிவேகத்துடன் நடத்திவந்தாள்.

சீக்கிரம் ஜூலியானு தாவீதுஇராசாவின் சங்கீதங்கள் அனைத்தையும் மனப்பாடம் செய்தாள். தான்பெற்ற போதனைகளை அனுஷ்டித்துவந்தாள். நமது திருவேதம் கற்பிக்கும்புண்ணியங்களை நுணுக்கமாய் அனுசரித்தாள். ஆர்ச்சியசிஷ்டதனத்திலும், தேவசிநேகத்திலும் நாளுக்குநாள் அதிகரித்தாள். எல்லாவற்றிலும்பார்க்க அவளுக்குப் பிரியமானவை ஏகாந்தமும், செபமுமே. மடத்திலும், மடத்தைச்சுற்றிலும்செய்யவேண்டிய மிகக் கடினமான வேலைகளையும், தாழ்ந்த அலுவல்களையும் அவள் மகிழ்ச்சியுடன் செய்வாள். இதையெல்லாம் கவனித்துவந்த சிரேஷ்டர்கள் 1207-ம் ஆண்டு—அதாவது அவளுக்குப் பதினுன்கு வயதானதும் அவளைத் தங்களுடன் கன்னிகாசபையிற் சேர்த்துக்கொண்டார்கள்.

அதுமுதல் அவள் தன்னைமுழுவதும் கடவுளிடம் கையளித்தாள். திவ்விய நற்கருணையில் வசிக்கும் யேசுவின்மேல் அவளுக்கு அளவில்லாப் பற்றுதல். திவ்வியநற்கருணை வாங்கக் கிடைத்த பாக்கியமானநாட்களிலே அவள் மற்றக் கன்னியாஸ்திரிமாரை விட்டகன்று தனிவாசம்செய்து செபத்திலும், தியானத்திலும் நேரத்தைச் செலவழிப்பாள். திவ்வியபூசையே அவளின் மிகப்பெரும் ஆனந்தம். எழுந்தேற்ற நேரங்களில் மறைந்திருக்கும் தன்தேவனை அவள் சாஷ்டாங்கமாகவிழுந்து ஆராதிப்பாள். அகத்தின்அழகு முகத்தில்தெரியும் என்றற்போல, இருதயத்தில் இருந்தநேசத்தை அவள்முகம் நன்குஎடுத்துக்காட்டும். அவள் தாழ்ச்சியுடன் தன் உணர்ச்சிகளை மறைக்க முயன்றபோதிலும் முடியவில்லை.

ஜூலியானுவுக்குப் பதினறுவயதானது. அவளுடைய தெய்வீக பத்தாபலோக காட்சிகளை அவளுக்குஅளிக்கத் திருவுளங்கொண்டார். அவற்றின் பொருளை அவள்கண்டுபிடிக்க முடியவில்லை. ஒருநாள்அவள் செபத்திலிருக்கையில் பின்வரும் காட்சியைக் கண்டாள்: பூரணசந்திரனை அவள் பார்த்தாள். அது நன்கு பிரகாசித்தபோதிலும், ஓரிடத்தில் இருட்டாயிருந்தது. ஆதலின் அது முற்றிலும் பிரகாசிக்கவில்லை. (பூரண சந்திரன் வட்டமாயிருக்கிறது. பூசைப்பலியின் பெரியசற்பிரசாத அப்பத்தை அது நமக்கு ஞாபகப்படுத்துகிறது அல்லவா?)

ஆரம்பத்தில் இந்தஅபூர்வகாட்சியை ஜூலியானு பொருட்படுத்தவில்லை. ஆனல், அது திரும்பத்திரும்ப வந்து தோன்றியது. ஆதலின் அதைப்பற்றிச் சாப்பியன்சியா தாயாரிடம் அறிவித்தாள். சாப்பியன்சியாவே அப்பொழுது மடத்தின் சிரேஷ்டதாயார். அவர் பத்தியும், புத்தியுமுள்ளபலரிடம் ஆலோசனை கேட்டார். காட்சியின் பொருளை அவர்களால் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆதலின் அதுவெறும் கனவென்றுசொல்லித் தள்ளிவிட்டார். இந்தமுடிவைப்பற்றி ஜூலியானு கேள்விப்பட்டதும் தாழ்ச்சியுடன் அதற்குத் தலைபணிந்தாள். அவர்களைப் போலவே அவளும்தீர்மானித்து, அந்தக்காட்சியை முற்றுகமறக்க முயன்றுள். ஆனல், முடியவில்லை. அவள் எங்குசென்றபோதிலும், என்னசெய்தபோதிலும் அந்தக்காட்சி அவள் கண்முன் நின்றது. இந்தப்பராக்கான நினைவுகளை அகற்றிவிடும்படி கடவுளைத் திரும்பத்திருமபப் பன்முறை மன்றுடினுள். அவளின் மன்றுட்டுக்குப்பதில் இல்லை. ஏதோ நாம்அறியாத காரணத்துக்காகக் கடவுள் அவளை இன்னும் அந்தகாரத்தில் வைத்திருந்தார். காட்சியின்பொருளை அவள் அறியச்செய்யவில்லை.

அதன்பின் அவளுக்கென ஒருசெபக்கூடம் கட்டும்படி சிரேஷ்டதாயார் உத்தரவிட்டார். அதில் ஜூலியானு முன்னையவிட அதிக நேரத்தைச் செபத்திலும், தியானத்திலும் செலவழிக்க அனுமதிக்கப்பட்டாள். உணவையும்மறந்து அவள் செபத்தியானத்தில் ஆழ்ந்திருப்பாள். திவ்வியநற்கருணையே அவளுடைய ஆத்துமசரீர உணவு. சிலசமயங்களில் சிவியஅப்பத்தை உட்கொண்டபின் அவள் அந்தச்செபக்கூடஞ் சென்று, எட்டுநாள் செபத்தியானத்தில் ஆமர்ந்திருப்பாள். தற்போது இருப்பதுபோல் ஒவ்வொருநாளும் திவ்வியநன்மை வாங்கும்வழக்கம் அந்தக்காலத்தில் இல்லை. பூரண சந்திரனின் காட்சியைப்பற்றி அவள் அடிக்கடி சிந்தித்துப் பார்த்தாள், அந்தக்காட்சியின் பொருளைத் தனக்கு வெளிப்படுத்தும்படி கடவுளைப் பிரார்த்தித்தாள்.

கடைசியாக அவள்மன்றுட்டுக் கேட்கப்பட்டது. ஒருநாள் நெடுநேரம் செபித்ததினுல் அவள் அலுத்துப்போய்த் தூங்கிவிட்டாள். அந்தநித்திரையின்போது இரட்சகர் அவளிடம் பேசினர். அந்தக்காட்சியின் பொருள் அவளுக்கு விளங்கியது. திவ்வியநற்கருணையானது தான் பெறுவதற்கு உரிமைபெற்றுள்ள மரியாதை வணக்கம் அதற்குச்செய்யப்படவில்லை. இரட்சகரின் நேசம்என்னும் பிரகாசம் திவ்வியநற்கருணைவழியாக மனிதஇருதயங்களைப் பிரகாசிப்பிக்க விரும்பியது. எனினும் அவர்விரும்பிய அளவு பிரகாசிப்பிக்க அனுமதிக்கப்படவில்லை. "ஜூலியானு, திருச்சபையில் ஒருதிருநாள் ஏற்படுத்தப்பட வேண்டுமென நாம் ஆசிக்கிறேம். அந்தத்திருநாள் இல்லாதது ஒருகுறையே. அது பீடத்தின் மிகவும்உன்னத பரிசுத்த தேவதிரவிய அனுமானத்தின் திருநாளே. இப்பொழுது அந்தநாள் பெரியவியாழக்கிழமையன்று மாத்திரமே கொண்டாடப்படுகிறது. ஆனல், அன்று நமது பாடுகளையும், மரணத்தையும்பற்றியே முக்கியமாகச் சிந்திக்கவேண்டியநாள். ஆகவே உலகமெங்கும் அந்தநாள் கொண்டாடப்படும்படி இன்னெருதிருநாள் ஏற்படுத்தப்பட வேண்டுமென நாம் ஆசிக்கிறேம். அதை நாம்விரும்புவது மூன்றுகாரணங்களுக்காக:

"முதலாவது, இந்தத் தேவஇரகசியத்தின்மீது மக்களுக்குள்ள விசுவாசத்தை எதிரிகள் தாக்கத் தொடங்கியிருக்கிறர்கள். வருங்காலத்திலே இன்னும் அதிகமாய்த் தாக்குவார்கள். ஆதலின் அந்தவிசுவாசம் திடப்படுத்தப்படும்படியாக—இரண்டாவது, விசுவசித்து உண்மையைத்தேடுகிற மக்கள் அந்தச்சத்தியத்தைப்பற்றி நன்கு கற்பிக்கப்பட்டு, அதைநம்பவும், புண்ணிய பாதையில் நடக்க அவசியமானபலத்தைத் தேவநற்கருணைஎன்னும் ஊற்றிலிருந்து பெறவும்—மூன்றாவது, திவ்வியநற்கருணையில் இருக்கும் தேவமகத்துவத்துக்குச் செய்யப்படும் அவமானம், பத்தியின்மைஆதியவற்றிற்குப் பரிகாரமாக அந்தத்தேவதிரவிய அனுமானத்தை ஆராதிக்கவுமாக இந்தத் திருநாள் ஏற்படுத்தப்பட விரும்புகிறேம். இந்தத்திருநாளை ஏற்படுத்தும் கருவியாக ஜூலியானு, நீயே தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறுய்."

இரட்சகரின் விருப்பங்களை ஜூலியானு பிறர் அறியும்படி செய்தாள், ஐம்

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

# தேம்பாவணியும் செபமாலையும்

(பண்டிதர் C. செல்வரத்தினம்)

## களிகூர்ந்தகாரணிக்கம்

### 5-ம் காரணிக்கம்—3-ம் பிரியதத்தம்

### 43. பாஸ்காப்பண்டிகை

ஜெருசலேம் தேவாலயத்தில் நடைபெறும் விழாக்களில் அதிகம்சிறப்பாகக் கொண்டாடப்படுவது பாஸ்காப் பண்டிகையே, அப்பண்டிகை எட்டு நாள்வரை கொண்டாடப்படுவது. பிற நாடுகளிற்சென்று குடியேறிய யூதரும அவ்விழாவைக்காணத் தவறமாட்டார்கள். ஏறக்குறைய மூப்பதுலட்சம்யாத்திரிகர்கள் அதிலே பங்குபற்றுவார்கள். அதனுல் அந்தஎட்டுநாட்களின்போதும் ஜெருசலேமாநகரம் ஓர்சனசமுத்திரமாகக் காணப்படும். நகரில் தங்குவதற்கே போதியஇடம் கிடையாமற்போய்விடும். ஆதலால் அயற்கிராமங்களிலும் போய்த் தங்குவார்கள். மைதானங்களிலேயும், மலைச்சாரல்களிலேயும் சிறுகுடிசைகளைக் கட்டியோ, கூடாரங்களைஅமைத்தோ அவர்கள் தங்குவதும் வழக்கம்

தாங்கள் தங்கியிருப்பதற்கெனச் சூசைமாதவனும், திவ்வியயேசுவும் குடிசைஒன்றைச் சமைத்துக்கொள்ளுகிறர்கள். தேவதாயும் அவர்களுக்கு உதவிசெய்கிறுள். அதிசீக்கிரத்திலே குடிசை உருவாகிவிடுகிறது. அங்கே அவர்கள் சிறிதுநேரம் தங்கியிருந்து சிரமபரிகாரம் செய்துகொள்ளுவார்கள். தேவாலயத்தில் நடைபெறும் ஆராதனைகளுக்கு நேரம்தவருது சமுகமளிப்பதே அவர்களின் இடையருத வேலையா யிருந்தது.

பாஸ்குத்திருநாளின்போது முக்கியமாகநடைபெறும் நிகழ்ச்சி, செம்மறிப்புருவையைக் கொன்று புசிப்பதாகும். அவ்ஆட்டுக்குட்டியோ மாசுமறுவற்றதாய் இருத்தல்வேண்டும். அது மாலைவேளையிலே கொல்லப்படும். அதன் எலும்பொன்றும் முறியக்கூடாது. அங்ஙனமாகக் கொல்லப்பட்ட செம்மறிப்புருவையின் மாமிசம் புளியாதமாவினுற் செய்யப்பட்ட அப்பத்துடனும், கீரையுடனும் புசிக்கப்படும். அன்றையதினம் ஏறக்குறைய இரண்டலாலட்சம் ஆடுகள்வரையிற் கொல்லப்படுமெனச் சரித்திராசிரியர்கள் எழுதியிருக்கின்றனர்.

யூதர்களிடையே இவ்வழக்கம் பரம்பரையாக நடைபெற்றுவந்தது. ஒவ்வொருவருடமும் நடைபெறும் பாஸ்குத்திருநாளின்போது குடும்பதலைவன் இச்சடங்கின் உட்பொருளைத் தன்சந்ததியிற்பிறந்த இளையோருக்குப் பின்வருமாறு விளக்கிக்காட்டுவான்.

"முற்காலத்திலே எங்கள்முன்னேர்கள் எகிப்தியரின் அடிமைகளாக எகிப்துநாட்டிலே வாழ்ந்துவந்தார்கள். தேவப்பிரசைகளாகிய எங்களை அந்நாட்டுமன்னவனுகிய பார்வோன்என்பவன் மிகவும்கொடுமையாக நடத்தியதோடு, கடவுள் பூசை முதலாய்ச் செய்யவொட்டாதபடி தடுத்தும் வந்தான். அக்கொடுமைகளைக் கண்ட தேவனும் தமது பிரசைகளின்மேல் இரங்கி மோயீசன் என்பவரை அரசனிடம் அனுப்பிவைத்து, இசிறவேலை அடிமைத்தனத்தினின்றும் மீட்கும்படி செய்வித்தார். கொடியஅரசன் மோயீசனதுவேண்டுகோளுக்குஇணங்காமையால் அவர் ஒன்பதுவிதமான ஆக்கினைகளை வருவிக்கலானர் அவைகளைக்கண்டும் அரசன் மனமிளகாமையால் கடைசியாகத்தேவன் ஒருகொடுந்தண்டனையை விதிக்கலானர்.

"கண்முழு தட்ட இருளிரா நடுவில்
கதத்தள(வு) அருந்திறல் மிக்க
விண்முழு தன்றி மண்முழு திறைஞ்சும்
வேந்தர்வேந் தரைநொடிப் பொழுதின்
மண்முழு தாண்ட கோன்தலை மகனு
மற்றவர் தலைமகர் யாரும்
எண்முழு தின்றி இறந்துயிர் செகுப்ப
எகிப்துநா டெங்கணும் கொன்றுன்"

நடுநிசியிலே கோபத்தினளவாக வல்லமையுமுடையராய்,வானும் மண்ணும் வணங்கும் அரசர்க்கரசனுகிய கர்த்தா ஓர்அரைநொடிப் பொழுதிலே அந்நாட்டைத் தனியாண்ட கொடியஅரசனது தலைமகனையும், மற்றைய எகிப்தியரது தலைமக்களையும் கொன்றுன். ஆயின் இக்கொடிய தண்டனையிலிருந்து அற்புதமாகத் தேவப்பிரசைகளாகிய எங்களைக் காப்பாற்றியருளினுர். எவ்வாறெனில், ஏலவேதானே மோயீசனுக்குக் கற்பித்தபிரகாரம் தேவப்பிரசைகள் ஓர்ஆட்டுக்குட்டியைக்கொன்று அதன்இரத்தத்தைத் தங்கள்கதவுகளிற் பூசியிருந்தார்கள். அந்தஅடையாளத்தைக்கொண்டு எகிப்தியரிலிருந்து தேவப்பிரசைகள் பிரித்தறியப்பட்டார்கள். இரத்த அடையாள மற்றிருந்த எகிப்தியரின் இல்லந்தோறும்சென்று தேவதூதன் அவர்களின் தலைச்சன்பிள்ளைகளை எல்லாம் கொன்றுகுவித்தான்.

அங்ஙனம் தேவப்பிரசைகளாகிய எங்கள் சந்ததியாரைத் தேவன் காப்பாற்றி மீட்பித்ததின் ஞாபகமாகவே இவ்விழாவைக் கொண்டாடி வருகிறேம். இவ்விழாவானது செம்மறிப்புருவையின் அடையாளமாகிய உலக இரட்சகர் வருமளவும் கொண்டாடப்படவேண்டுமென்பது மோயீசனின் கட்டளையாகும்" என்று எடுத்துச் சொல்லப்படும்.

அவ்வாறே திருக்குடும்பத்தின் தலைவராகிய சூசையப்பரும் அன்று தமது மைந்தனுகிய திவ்வியயேசுவுக்கு அவ்வரலாற்றை எடுத்துச்சொன்னர். தமதுதிருக்குமாரன் உலகஇரட்சகர் என்பதை அவர் அறிந்திருந்தபோதும் தமதுதாழ்ச்சியால் மற்றவர்கள் விகற்பமாக எண்ணுதபடி சம்பிரதாயபூர்வமாக அதைவிளக்கிக் கூறலானர்.

தேவமைந்தனை திவ்வியயேசுவும் தம்கைத்தாதையின் உரைகளைக் கவனமாகக் கேட்கிறர். செம்மறிப்புருவையைப் பலியாக்கி எகிப்தியரின் கொடுமையிலிருந்து இசிறவேலர் காப்பாற்றப்பட்டதுபோல, அவரும் தம்மைப் பலியாக்கி எம்மைஇரட்சிக்க வேண்டியிருந்தமையால் அன்றுகொல்லப்பட்டதான மாசுமறுவற்ற ஆட்டுக்குட்டியின்மாமிசத்தை உற்றுநோக்கியவாறு ஆழ்ந்தசிந்தனையில் மூழ்குகின்றர்.

இவ்வாறு சிந்தனையில்மூழ்கிய திவ்வியயேசுவை அவரதுதிருஅன்னை பரிதாபத்துடன் நோக்குகிறுள். அவளின் பார்வையில் தொனித்தவியாகுலத்தை அவதானித்த மைந்தனும் உடனே மகிழ்ந்தமுகத்துடன் புளியாதஅப்பத்தைக் கீரையுடனும், செம்மறிப்புருவையின் மாமிசத்துடனும் உண்ணுகின்றர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறியபுஷ்பத்தின் மகாலயம்

விசியேபதியில் வருகிற ஆடி மாதம் 11-ந் திகதி குழந்தை யேசுவின் அர்ச். தெரேசம்மாளது மகாலய அபிஷேகதிருவைபவத்திலே உலகின் பல்வேறுபகுதிகளிலிருந்துபோகும் 15 கருதினால்மாரும், 60 அதிமேற்றிராணிமார், மேற்றிராணிமாரும் கலந்துகொள்ளவிருக்கின்றார்கள். அப்போது கருதினால்பச்செல்லியென அறியப்பெற்ற 12-ம் பத்திநாதபாப்பரசர் இந்தமகாலயத்தை ஆசீர்வதித்த தினத்திலிருந்து சரியாய்ப் 17 வருடங்களின்பின் இந்தஅபிஷேகம் நடக்கவிருக்கிறது. இதற்குத் தமதுபிரதிநிதியாகப் பரிசுத்தபாப்பரசர் மான்ஸ்நகர் அதிமேற்றிராணியாரான கருதினால் கிறென்ரே ஆண்டவரை நியமித்திருக்கிறார். ஆடிமாதம் 11-ந் திகதி அவரால் மகாலய பெரியபலிபீடத்தில் பாடற்பூசைநிறைவேறும். இருபதுபக்கப்பலிபீடங்களும் வேறுவேறான நாடுகளிலிருந்துபோகும் இருபதுகுருசிரேஷ்டர்களால் அபிஷேகஞ்செய்யப்படும். அர்ச். தெரேசம்மாளின் திருஎன்புகள் கார்மேல்மடத்திலிருந்து மகாலயபலிபீடத்துக்கு இடம்மாற்றப்படுவதோடு ஆடிமாதம் 7-ந் திகதி வைபவங்கள் ஆரம்பமாகும். ஆடி 9-ந் திகதி குடும்பநாள். அன்றுதினம் அர்ச். தெரேசம்மாளின் குடும்பத்தைச்சேர்ந்தவர்கள் (மாட்டீன்கள்) கலந்துகொள்வார்கள்.

## லூர்துதிருப்பதி வைத்தியர்

லூர்துதிருப்பதியிலே மாதாவின் அருளால் புதுமையாகக் குணமடைகின்ற யாத்திரிகர்களைப் பரிசோதனை செய்கின்ற வைத்தியகருமசாலையின் தலைவராயிருந்துவந்தவரான டக்றர் பிரான்சிஸ் வேறே அவர்கள் தமது 65-ம் வயதில் திருசேத்திரத்திற்குச் சமீபமாகவுள்ள தம்முடைய இல்லத்தில் சமீபத்திலே காலஞ்செல்லலாயினர். பன்னிரு பிள்ளைகளுக்குத் தந்தையான இவர் ஐந்துவருடகாலம் பிரான்சிய செனற்சபையில் ஓர் அங்கத்தவராயிருந்தார். லூர்துபதியிலுள்ள சர்வதேச வைத்தியசங்கத்தின் தலைவராயிருந்து இவர் ஆற்றியுள்ள சிறந்தசேவைகளைப் பாராட்டிப் பரிசுத்தபாப்பரசர் இவருக்குத் திருக்கல்லறையின் நைற்கமான்டர் எனும் மகிமைவரிசையை அளித்திருந்தார்.

## பிள்ளைகளின் திருயாத்திரை

சமீபத்திலே லூர்துபதிக்கு நடைபெற்ற தேசீயபாடசாலைகளின் திருயாத்திரையில் பிரித்தானியதேசம் முழுவதிலுமுள்ள 68 பாடசாலைகளைச்சேர்ந்த ஆயிரம்பிள்ளைகளுக்குமேல் கலந்துகொண்டார்கள். இவர்களில் பதினொருபிள்ளைகள் குருடர்கள். திருப்பதியிலே இவர்களுடன் பிரான்ஸ், இத்தாலி, ஸ்பெயின் ஆதிய நாடுகளிலிருந்துபோன பாடசாலைப்பிள்ளைகளும் சேர்ந்துகொண்டார்கள். அங்கே இவர்கள் தங்கள் அதிமேற்றிராணிமார், மேற்றிராணிமார்களைத் தேவதாயார் வழிநடத்தும்படியாகவும், தங்கள் பாடசாலைகளின் நலனுக்காகவும் விசேஷ விதமாக மன்றாடினார்கள். அப்பதியில் தங்கியிருந்தபோது இவர்கள் அநேககுருமாரையும் அடக்கிய சுமார் ஆயிரங்குருடர்களான யாத்திரிகர்கள் நடத்திய சுற்றுப்பிரகாரத்தைப் பார்க்கக்கூடியவர்களானார்கள்.

## பாலர்களின் சமாதானசெபம்

ரோமைநகரைச்சேர்ந்த ஒருலட்சம் சிறுவர், சிறுமிகளுக்குமேல் சமீபத்திலே ஓர்நாள் வெண்மையான உடைகள் அணிந்து அந்நகர முழுவதிலும் நிறைவேறிய விசேஷ திவ்விய பூசைகள் கண்டு, பிள்ளைகளுக்கெனப் பரிசுத்தபிதாவால் ஆக்கப்பெற்று, ஏற்கனவே பல்வேறுபாஷைகளிலும் மொழிபெயர்த்து உலகமுழுவதிலுமே மேற்றிராசனங்கள் மூலமாக வழங்கப்பட்ட விசேஷ சமாதானசெபத்தை முதன்முறையாகச்சொன்னார்கள். "கிறீஸ்துவில்சமாதானம்" என்ற இயக்கத்தின் தலைவரென்றமட்டிலே பரீஸ்நகர் அதிமேற்றிராணியாரான கருதினால் பெல்தின் ஆண்டவரால் ஒழுங்குபண்ணப்பட்ட "சமாதானதின"த்திலே ரோமாபுரியின் பங்குத்தானம் இதுவாகும். இந்த "மகத்தானகருத்"தை ஆதரிப்பதாகச் சென்ற கார்த்திகைமாதம் பாப்பரசர் கருதினால் பெல்தின் ஆண்டவருக்கு அளித்தவாக்கை நிறைவேற்றுமுகமாகவே அவ்வாறு செய்யப்படலாயிற்று.

## தேவதாயாரின் கோவில்கள்

அமெரிக்க ஐக்கியதேசத்திலே பல்வேறு நாமங்களையுங் கொண்டனவாய்த் தேவதாயாரின்பேரால் 36 ஆசனக்கோவில்களும், 3,278 கோவில்களும் இருப்பதாக, சிக்காகோநகரைச் சேர்ந்த பிறதர் ரோமன் விற்ரோஸ்கி அவர்கள் கண்டறிந்திருக்கின்றார். அவர் அறிந்துள்ளபடி, அர்ச். மரியநாயகி, அமலோற்பவநாயகி, கார்மேல் நாயகி, லூர்துநாயகி, சதாசகாயநாயகி, செபமாலைநாயகி, பரலோகநாயகி, குவாடலூப் நாயகி, மாசில்லாத இருதய நாயகியென்னும் நாமங்களையே அதிகமானகோவில்கள் கொண்டிருக்கின்றன.

# கத்தோலிக்க



# சமாச்சாரம்

## கருதினால்மாராக இருக்கின்றனர்

அர்ச். பத்தாம் பத்திநாதராலே நியமனஞ்செய்யப்பெற்ற அதிமேற்றிராணிமார், மேற்றிராணிமார்களிலே எண்மர் தற்போது கருதினால்மாராய் இன்னமும்சீவந்தராக இருக்கின்றனர். இவர்களில் நான்குகருதினால்மார் இரும்புத்திரைக்குப் பின்னால் இருந்துவருகின்றனர். இவர்களில்மூவர் சிறைவாசஞ் செய்கின்றனர். அந்தியோக்நகரின் சீரியபத்திரியாக்குவான 74 வயதுடைய கருதினால் ரப்பூனி ஆண்டவர் 1912-ம் ஆண்டு மேற்றிராணியாராக நியமனம் பெற்றபோது 32 வயதுடையவர். குயிற்றோநகர் அதிமேற்றிராணியாரான 80 வயதுடைய கருதினால் தெலா தொறே ஆண்டவர் லோஜாநகர் மேற்றிராணியாராக நியமனம்பெற்றபோது 38 வயதுள்ளவர். சந்தியாகோநகர் அதிமேற்றிராணியாரும், 87 வயதுடையவருமான கருதினால் காறோ றொட்றிக்குவெஸ் ஆண்டவர் 1912-ம் ஆண்டும், பிறேசில்தேச பாகியாநகர் அதிமேற்றிராணியாரான 78 வயதுடைய கருதினால் தாசில்வா ஆண்டவர் 1911-ம் ஆண்டும், மேற்றிராணிமாராக நியமனம்பெற்றார்கள்.

## ஐந்துபிள்ளைகளில் ஒன்று

கனடாதேச காலன்டர்எனுமிடத்தில் இற்றைக்கு இருபது வருடங்களின்முன் ஒரேபிரசவத்தில்பிறந்த ஐந்துபெண் குழந்தைகளிலும் மரியேஎனும் பெண்மணி சமீபத்திலே தனது இருபதாம்வருட பிறந்தபெருநாளுக்கு நான்குதினங்களின்முன் குவெபெக்நகரிலுள்ள மிகவும் பரிசுத்த தேவதிரவியானுமான ஊழியர்கள் கன்னிகாசபையிலே சிஸ்றர்மரியே இராக்கேல்எனும் நாமத்துடன் ஓர்கன்னியாஸ்திரியாகி யிருக்கின்றாள். இவள் ஆறுமாதங்களின்முன் இந்தமடத்தில் சேர்ந்துகொண்டாள். இரண்டுவருடங்களின் பின்னரே நிரந்தரவார்த்தைப்பாடு கொடுப்பாள். கன்னிகாவஸ்திரந்தரிக்கும் திருச்சடங்கு நடைபெற்ற இருமணிநேரத்திலும் அவள்பெற்றாரும், மற்றநான்கு சகோதரிகளும் சமுகமாயிருந்தார்கள்.

## ஆட்டுமந்தையில் ஓநாய்கள்

போலாந்திலே லுபிளின்நகர கத்தோலிக்கசர்வகலாசாலையில் கற்றுவந்த எட்டுமாணவர்கள் போலிஷ் மேற்றிராணிமாருக்கு மாறாய் ஏனையமாணவர்களைத் தூண்டிவிட்டும், மாக்ஸிய லோகாயதகொள்கையை ஆதரித்தும்வந்து அகப்பட்டு அச்சர்வகலாசாலையிலிருந்து வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் கம்யூனிஸ்த ஏசன்றர்களாய் ஆட்டுமந்தையுள்புகுந்த ஓநாய்கள்போன்று அச்சர்வகலாசாலையின் வேதசாஸ்திர கலாசங்கத்தில்சேர்ந்து கம்யூனிஸ்த கொள்கைகளைப் பரப்பவும், "முன்னேற்ற கத்தோலிக்க" இயக்கம் என்ற கம்யூனிஸ்த போலிஇயக்கத்தைப் பலப்படுத்தவும் முயற்சித்துவந்தார்கள். கருதினால் விசின்ஸ்கி ஆண்டவரைக் கைதுசெய்யப் போலிஷ் கம்யூனிஸ்தஅரசாங்கம் எடுத்துக்கொண்டநடவடிக்கை சரிதானென்றுமுதலாய் இவர்கள் பகிரங்கமாக ஒப்புக்கொண்டார்களாம். லுபிளின் சர்வகலாசாலையே இரும்புத்திரைக்குப் பின்னால் சுதந்திரமாகவிடப்பட்டுள்ள பாப்பரசரின ஒரேயொரு சர்வகலாசாலையாகும். இது 3,000 மாணவர்களைக் கொண்டது.

## நயகரா அருவிவீழ்ச்சி

நயகராஎன்ற உலகிற்பெரிய அருவிவீழ்ச்சியைக் கண்டுபிடித்தவர்யார்? குருமாரான இருவரே அதைக் கண்டுபிடித்தனரென்று உரிமைபாராட்டப்படுகிறது. இவர்களில்ஒருவர் ஓர் பிரான்சீஸ்கன்சபை மிஷனரியாவர். மற்றவர் யேசுசபைக் குருவானவர். பிரான்சீஸ்கன் சபையைச்சேர்ந்த ஓர்பெல்ஜியரான வண. லூயிஸ் ஹென்னெப்பின்சுவாமியார் காலஞ்சென்ற 250-ம் ஆண்டு நிறைவு ஞாபகார்த்தமாகச் சிலதினங்களின்முன் பெல்ஜியஅரசாங்கம் இவரது பிரதிமையுடன் பலவினப் புதிய தபால்முத்திரைகளைப் பாவனைக்குவிடுத்திருக்கின்றது. இவர் 1675-ம் ஆண்டு புதிய உலகத்தில் கால்வைத்தார். 1680-ம் ஆண்டு மாசி 8-ந் திகதி நயகராஅருவிவீழ்ச்சியைக்கண்டார். ஆனால், ஓர் யேசுசபைக்குரவரான வண. போல் றேக்குனியோசுவாமியார் அதற்கு 35 வருடங்களின் முன் அதனைக்கண்டு குறிப்பிட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

— கனடாதேச மொண்றியல்நகரிலே அந்நகர்மேற்றிராணியாரான கருதினால் லெஜெர்ஆண்டவர் மரியாயின் வணக்கமாசத்தை ஆரம்பித்துப் 10,000 மக்களை வழிநடத்தியபோது பன்னிருபாஷைகளில் செபமாலை சொல்லப்படலாயிற்று. பிரான்சிய, ஆங்கில, சிலாவிய, லிதுவானிய, ஜேர்மனிய, உக்றேனிய, ஹங்கேரிய, போலிஷிய, ஜப்பானிய, ரூஷிய, இத்தாலிய, எபிரேயபாஷைகளே அப்பன்னிரண்டுமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தியவேத பாதுகாவலன்

1954-ம் ஆண்டு
ஆனி மாதம் 17-ந் திகதி

# மருதமடு யாத்திரை

ஸ்ரீலங்காவின் ஞானவளம் பொருந்த யாத்திரைப் ஸ்தலங்களுக்கெல்லாம் ஓர்நடுநாயகம்போல் திகழ்வதாகிய மருதமடுவென்னும் திருசேத்திரத்தையுன்றிச் சிந்திக்குந்தோறும் ஞானமனோகரம் பிறக்கின்றதே! கானகத்திடையே எழுந்தருளிக் காட்சியளிக்கும் வானோர்க்கரசியான பரிசுத்த செபமாலை இராக்கினியின் பாதாரவிந்தத்தை நமது ஞானக்கண்களால் உற்றுநோக்குந்தோறும் உள்ளத்தில் பரமானந்தம் பெருகுகின்றதே! அத்திருசேத்திரத்தின் கண்ணே, ஆண்டுதோறும் பதினாயிரக்கணக்கான யாத்திரிகர்கள் கூடுஞ்சமுகத்திலே, மகா ஆடம்பரமாக நடந்தேறும் ஆடிப் பெரியதிருவிழாவின் ஆரம்ப வைபவ ஆரவாரமானது நம்மெல்லோரையும் காந்தம்போல அதன்பால் கவர்ந்திழுக்கின்றதே! இத்துவீபத்தின் நானா பகுதிகளிலுமிருந்தே மருதமடுத் திருசேத்திரத்தைநாடி, அங்கண் திரிலோகநாதனைத் தமது திருக்கரந் தாங்கியவராய்த் திவ்வியசிம்மாசனங்கொண்டெழுந்தருளியிருக்கும் பரமஆண்டவனின் திருப்பாதகமலத்தைத் தேடி, சாதிசமயபேதமின்றியே திரள்திரளாய் யாத்திரிகர்கள் சரியும் பெரிய யாத்திரைகாலமும் இதோ வருகின்றதே!

பூர்வத்திலே தேவப்பிரசைகளான இசிறவேல்மக்கள் பரிசுத்த கானான்தேசத்தின் கடைசி யெல்லைகளினின்றும் ஜெருசலேம் தேவாலயத்தை நோக்கித் திருயாத்திரையாகப் புறப்பட்டுத் தேவநாமத்தைப் புகழ்ந்துகொண்டும், திவ்விய கீதங்களைப் பாடிக்கொண்டும் கூட்டங்கூட்டமாகச் செல்வதைக் காணுமிடத்து, அஃது பெரும் அபூர்வகாட்சியாகக் காணப்படுமாம். அவ்வாறே ஸ்ரீலங்கா துவீபத்தின் கடைசி யெல்லைகளினின்றும் மருதமடுத் திருசேத்திரத்தை நோக்கி இலங்கைமக்கள்பலரும் யாத்திரைபுறப்பட்டுச் செபமாலைத் தாயாரையும், அவர்திருக்குமாரனையும் துதித்துக்கொண்டும் செவிக்கின்பமான திவ்வியகீதங்களைப் படித்துக்கொண்டும், 153 மணிச்செபமாலையைப் பயபக்தியாய்ச் செபித்துக்கொண்டும்திரள்திரளாய்ச் செல்வதைக் காணுமிடத்து இஃதும் ஓர் அபூர்வ காட்சியாகுமன்றோ! திரிபுவனங்களையும், அகிலசராசரங்களையும் படைத்துக்காக்கும் பரமனை இந்தஅவனியிற் பயந்த அமலியும், அற்புதங்களைப்புரிய வரம்பெற்ற அர்ச்சியசிஷ்டர்களுக்கெல்லாம் பரம அரசியுமாகிய பரிசுத்த செபமாலைநாயகி மருதமடுத் திருக்ஷேத்திரத்தில் மழைமாரியென்னப் பொழிந்துவருகின்ற அருள்மாரியை அதன் ஆடிப் பெரியதிருவிழா இனிதே தெளிவிக்கப் போதியதன்றோ!

மடுப்பதியிலே செபமாலைத் தாயாரிடம் நாம் அடைந்துகொள்ளவேண்டிய விசேஷ வரங்களில், செபமாலையைத் தக்கவிதமாய், உச்சிதபேரையாய்ச் செபிப்பதற்கான வரமும் ஒன்றாய் இருக்கவேண்டும். ஏனெனில், பாத்திமாபதியிலே செபமாலைமாதா மூன்று பிள்ளைகளுக்கும் காட்சிஅளித்தபோது, செபமாலையைப் பத்தியுடன் செபித்து வருமாறு ஏவியிருக்கின்றார். லூர்துபதியிலே அவர் செபமாலையைக் கரத்தேந்தியவராய்க் காட்சியளித்திருக்கின்றார். திருச்சபையும், அதன் ஞானமக்களும் செபமாலையால் அடைந்துகொண்ட நன்மைகள் இம்மட்டென்று சொல்லமுடியாது. ஆதலால், நாம் செபமாலையைப் பத்தியுடன்செபிக்கப்பயின்றுகொண்டோமானால், செபமாலையைப் பத்தியுடன் செபித்துக்கொண்டு வருவோமானால், செபமாலைத் தாயாரிடமிருந்து நமக்குவேண்டியவைகளைப் பெற்றுக்கொள்வோமென்று நம்பியிருக்கலாம். நமது இராக்கினியும், மாதாவுமாகிய செபமாலைத்தாயார் தம்முடைய இரக்கத்தின் சிம்மாசனத்திலே வீற்றிருந்து தம்மை நாடிவருவார்மேலும், தமது பத்தியுள்ள ஞானப் பிள்ளைகள் மேலும் தமது அருள்மாரியை அதிகமதிகமாக மேன்மேலும் பொழிந்தருள்வாராக.



## சதாசகாயமாதா கோணம்

### மகா தயையுள்ள கன்னிகை

மரியாய் எங்கள் சதாசகாய மாதா. ஏனெனில, அவ மகா தயையுள்ள கன்னிகையாக விளங்குகிறு. யேசுநாத சுவாமி தமது திருத்தாயாரைநோக்கி: "தாயாரே! உமக்கு விருப்பமானதெதுவோ அதை நம்மிடங் கேளும்" என்று கூறியபோது, "நிர்ப்பாக்கியர் மேல் உமது தயவைக் காட்டியருளும்" என்று மாதா விடைஇறுத்ததைக் கேட்டதாக அர்ச். விறிசித்தம்மாள்மூலம் அறிகிறோம். பாவிகளைக் காட்டிலும் மேலான நிர்ப்பாக்கியர்கள் உலகத்தில் இல்லையாதலால், அவர்கள் மட்டில் தேவமாதா மிக்ககரிசனையாய் இருக்கிறு. அவர்களை இரட்சிப்பதைவிட அவவுக்கு வேறுகவலையே இல்லை. ஏவையின் மக்களை வாதிக்கும் கஸ்தி துன்பங்களைக்குறைக்க, இல்லாமற்பண்ண அவவுடைய இருதயம் எப்போதும் ஆத்திரப்பட்டுக்கொண்டிருக்கிறது. அவர்களின் அவசரங்களில் எல்லாம் உதவிசெய்ய அவ எப்போதும் ஆயத்தமாகக் காத்துக்கொண்டிருக்கிறு. தம்முடைய உதவிமூலம் தமது தேவகுமாரனின் பக்கமாக ஆத்துமங்களை இழுத்தெடுப்பதே அவவின் ஏகநோக்கமாக விருக்கின்றது.

மற்றையோரின் துயர்கண்டு தேவமாதா அவர்கட்குஉதவிபுரிய எவ்வளவு ஆத்திரப்படுகிறு என்று காண்பிக்க—அத்தாட்சிப்படுத்தக் கானாவூர்க்கலியாணத்தில் நடந்தபுதுமை ஒன்று மாத்திரமேபோதும். தேவதாயாரின் வல்லமையைக்காட்ட இந்தச்சுவிசேஷக் கதையிலும்பார்க்க ஒப்பானதும் மிக்கானதும் வேறெதுவும் இல்லை. மரியாயினுடைய வல்லபத்தின் வெற்றி இதிலிருந்து எல்லோருக்குந் துலாம்பரமாகத் தெரிகிறதல்லவா?

இந்த உலகில் வாழ்ந்த காலத்தில் உபத்திரவப்படுவோர் மட்டில் அவஅவ்வளவு கருணையும், தயையும், இரக்கமும் காண்பித்திருந்தால், இப்போ பரலோக பூலோக அரசியாக மோட்ச சிம்மாசனத்தில் இருந்துகொண்டு எவ்வளவோ அதிகமான தயை காட்டக்கூடியதாக இருக்குமல்லவா? இதற்கு ஆட்சேபனையும் உண்டா? "பரதேசிகளாயிருக்கிற நாங்கள் ஏவையின்மக்கள்" என்றும், "இந்தக் கண்ணீர்க் கணவாயிலிருந்து பிரலாபித்து அழுது உம்மையே நோக்கிப் பெருமூச்சுவிடுகிறோம்" என்றும் தேவதாயாருக்கன்றி வேறுயாருக்கு உள்ளமுருகிச் சொல்லுகிறோம்.

தேவமாதா தமது பிள்ளைகள்மட்டில் எப்போதும் அதிக தயையுள்ளவவாக இருக்கிறு. துக்கதுயரங்களின்பாரம் எங்களை அமுக்கும்போது—எங்கள் நேசத்துக்குப் பாத்திரமானவர்கள் தேவனைவிட்டுப்பிரிந்து பாவவழியில் அலைந்துலைந்து திரியும்போது—சிலுவைகள், துன்பங்கள், பீடைகள் எங்களை நசுக்கி மனச்சோர்வு உண்டாக்கும்போது எங்களுக்கு இந்த நல்லதாயின் தயையும் இரக்கமும் அவசியந்தேவைப்படும். அவவின் தாய்க்குரிய கண்காணிப்பும், பாதுகாப்பும அவசியந்தேவைப்படும். அடிமைக்கு இரட்சிப்பும், நோயாளிக்குச்சுகமும், கிலேசப்படுவோருக்கு ஆறுதலும், பாவிக்கு மன்னிப்பும் அவமூலமாகவே கிடைக்கின்றன. அவவின் இரக்கப்பெருக்கம் இம்மட்டு அம்மட்டு என்று சொல்ல முடியாது.

ஒரு தாயின் நேசம் ஒரு தாயின் பாதுகாப்பைப் பிறப்பிக்கிறதென்பார்கள். இந்தப்பாதுகாப்பு கிரியாம்சத்தில் காணக்கூடியதாக விருக்கும். பரிசுத்த பாப்புமாரும், திருச்சபையின் போதகாசிரியரும் ஒரேவாய்ப்படத் தேவதாயாரின் தயவைப்பற்றி அறிக்கையிடுகிறார்கள். அளவில்லாத இரக்கமுள்ள தேவன் தேவதாயார்மூலம் எங்கள் நம்பிக்கையை உறுதிப்படுத்தவும், எங்கள் துன்பதுயரங்களில் ஆறுதல் அளிக்கவும் சித்தமாயிருக்கிறார் என்று இடித்திடித்துக் கூறுகிறார்கள்.

எனவே, எங்கள் எல்லாஆசைதேவைகளிலும் மரியாயை—சதாசகாய மாதாவை அண்டிச்செல்வோமாக. மரியாயின் இரக்கமுள்ள இருதயத்திலும்பார்க்க அதிகபாதுகாப்பான அடைக்கலம் நாம் காணமுடியாது.

## சுதேச வர்த்தமானம்

### புதிய சத்திரவைத்தியசாலை

யாழ்ப்பாணஅரசினர்பெரிய ஆஸ்பத்திரியில நவமாக அமைக்கப்படவிருக்கும் சத்திரவைத்தியசாலைக்குச் சுகாதாரமந்திரியார் திரு. ஈ. ஏ. நுசவெல அவர்கள் வருகிற 21-6-54 திங்கட்கிழமை பகல் 12 மணிக்கு அஸ்திவாரக்கல் நாட்டவிருக்கிறுரென அறிகின்றோம்.

### பற்றுநோய்க்கு மருந்து

"கான்சர்" என அறியப்படுகின்ற புற்றுநோய்க்குச் சத்திரசிகிச்சை, ஒளிச்சிகிச்சை ஆதிய முறைகொண்டு ஆங்கிலவைத்தியம் செய்யப்படுகிறது. ஆனல், கந்தர்மடத்தில் வசிக்கின்ற ஆயுள்வேத வைத்தியரான திரு. பி. செல்லையா அவர்கள் இந்தப் புற்றுநோயைத் தமிழ்மருந்துகளால் குணமாக்க முடியாதாவென்று பலவருடங்களாக இடையறாது எடுத்துக்கொண்ட பெருமுயற்சியாலே "யோகீஸ்வரரசம்" எனப் பெயர்கொண்ட மருந்து ஒன்றைத் தயாரித்திருக்கிறுரென்றும், இந்தநோயால் வருந்தியவர்களையும், இனிமேல் குணமாக்கமுடியாதெனக் கைவிடப்பட்ட நோயாளர்களையும் பூரண சுகமடையச் செய்திருக்கிறுரென்றும் தெரியவருகிறது.

### சட்டவைத்திய அதிகாரி

யாழ்ப்பாணச் சட்டவைத்தியஅதிகாரியாக டக்றர் ஜே. எஸ். அமரசிங்கம் அவர்கள் பதவியேற்றுக் கடமைபார்க்கத் தொடங்கியிருக்கின்றார்.

### உத்தியோகஸ்தரின் இளைப்பாற்றி

மலாயா, பர்மாநாடுகளிற்போன்று இலங்கையிலும் இனிமேல் அரசாங்க உத்தியோகஸ்தர்கள் 55 வயதிலே கட்டாயமாக இளைப்பாறவேண்டுமென்ற பிரமாணத்தை அரசாங்கம் விரைவிலே நடைமுறைக்குக் கொண்டுவரவிருக்கிறது. அரசாங்கசேவைக்கு அதிகம் இன்றியமையாதவர்களென்று கண்டாலன்றி மற்றப்படி எவரையுமே இனிமேல் 55 வயதுக்குமேல் சேவைசெய்ய அரசாங்கம் ஒருபோதும் அனுமதிக்கமாட்டாது. விரும்பினல் 50 வயதுடையவர்களும் இளைப்பாற அனுமதிக்கப்படுவார்கள். ஆனல், எவரும் வயதுவருமுன் இளைப்பாறும்படி கட்டாயப்படுத்தப்பட மாட்டார்களெனப் பிரதமர் தற்போது தெரிவித்திருக்கிறார்.

### கி. மு. சங்க பொதுக்கூட்டம்

உயிலங்குளக் கிராமமுன்னேற்ற ஆடவர்சங்க பொதுக்கூட்டம் சென்ற 15-6-54 செவ்வாய்க்கிழமை பிற்பகல் இவ்வூர்க் கத்தோலிக்கபாடசாலை மண்டபத்திலேமனறுர்க்காரியாதிகாரி திரு. எஸ். சபாரத்தினம் அவர்கள்தலைமையில் நடந்தேறியது. அத்தருணம் தலைவராலும், மன்னூர்ப்பகுதி எஸ். ஆர். டி. ஓ. அவர்களாலும் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன. பின்னர் திரு. எஸ். கிளமென்ற் சங்கதலைவராகவும், திரு. ஏ. பறுணந்து முத்துத்தம்பி காரியதரிசியாகவும், திரு. ம. அந்தோனி தனதிகாரியாகவும் தெரியப்பெற்றனர். அதன்மேல் நிர்வாக சபைஅங்கத்தவர்களும் புதிதாகத்தெரியப்பட்டதோடு கூட்டம்நிறைவாயிற்று.

— நிருபர்.

---

### அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றுஞ்சபை

அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றுஞ்சபை மாதாந்தகூட்டம இம்மாதம் 25-ந் திகதி வெள்ளிக்கிழமை பி. ப. 5 மணியளவில் அர்ச். சூசையப்பர் சிற்றுலயத்தில் நடந்தேறும. ஆடிமாதம் சகோதரர் பரிபூரணபலன்கள் அடையக்கூடிய நாட்கள் பின்வருவன:—
2, 8, 9, 11, 14, 21 (2), 23, 26, 27.
பொதுப்பாவமன்னிப்பு அடையக்கூடிய நாள்:— ஆடி 2. கூட்டத்தின்பின் ஆலோசனைச்சங்கம் நடைபெறும்.

A. S. FRANCIS OF MARY
for Director

---

### நன்றியறிந்த தோத்திரம்

இருகுடும்பங்களிற் பிறந்த இருவறிய பெண்பிள்ளைகளின் விவாக விஷயமாய் ஒருவருடத்துக்குள் அவர்களுக்கு நன்மை கிடைக்க வேண்டுமெனநினைத்துச் சதாசகாயமாதா, அர்ச். சூசையப்பர், மற்றும் அர்ச்சியசிஷ்டர்களை ஒவ்வொருநாளும் காலை மாலைதவறாது தொடர்பாக மன்றுடிவந்தேன். மன்றுட்டுத் தொடங்கி ஆறுமாசம் முடிவதற்கு முன்னமே ஒரே கிழமையில் இருபிள்ளைகளும் இரண்டு உத்தியோகஸ்தரையே விவாகஞ்செய்துகொள்ள ஆண்டவர் அருள்புரிந்தார். அதனல் தேவனுக்கு நன்றியும், சதாசகாய மாதா, அர்ச். சூசையப்பர், மற்றும் அர்ச்சியசிஷ்டர்களுக்குத் தோத்திரமும் சொல்லுகிறேன். அவர்களுடைய நாமம் என்றும் புகழப்படுவதாக.

கட்டைக்காடு எல். வி. ரீ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருதமடுச் செபமாலை நாயகிக்குத் துதி

### இரட்டை யாசிரிய விருத்தம்

1

மதங்கொண்ட யானையும் மாமடுப் பதியிலே
வந்திடின் மதமகன்று
மத்தகத் துச்சியில் வைத்தகை யாகவே
மண்டியிட் டொளிருதிங்கட்
பதங்கொண்ட நின்னெழிற் பாதமே தாழ்தலும்
பாய்புலிக் குழாமதெல்லாம்
பசுவினிரை யென்னவப் பதியிலே கூடிநின்
பகையான அலகைதன்னை
அதங்கொண்ட வலியவுன் அடிகளைத் தொழுதலும்
ஆயிரம் கோடிபக்தர்
அந்தியும் சந்தியும் அஞ்சலே செய்வதும்
அடியார்க் குரைக்கவேண்டும்
இதங்கொண்ட தேன்மலர்ச் சோலைசூழ் காட்டிலே
இடங்கொண் டெழுந்துநின்றே
இறையவனை யடைவதற் கெளிதான செபவடம்
இனிதேந்து கன்னிமரியே!

2

கானகப் புள்ளினம் கூடிமுக் காலமும்
கானம திசைத்துநின்மேல்
கட்டிடும் கவிதைகள் காதினுக் கெட்டிடக்
கயல்களும் கழனிவிட்டே
வானகம் பாய்ந்துதம் வாயிலே வாலினை
வைத்துமே அதிசயித்து
வந்துபின் வாவியில் வீழ்கையிற் சிந்திடும்
வண்ணபூந் தாதினாலோ
கூனகக் காடிதேன் கேட்டே குளக்கரைக்
கொம்பிலே குந்துமந்தி
கூடுடன் தேனினைக் கொட்டிடச் சிந்தியோ
குளத்துநீர் இனிப்பதம்மா!
மீனகம் கொண்டதேன் சுனையினுக் கருகிலே
மின்னுபொற் கோயில்கொண்ட
மீன்முடிச் செல்வியே மிளிருசிங் காரியே
மேதினிக் கினியதாயே!

3

தாயற்ற சேயும்நின் தண்ணடிக் கண்மையில்
தனிமையைத் துறந்துகொள்வான்
தணியாத துயருள்ள பிணியனும் அங்குதன்
சஞ்சலந் தீர்ந்துகொள்வான்
சேயற்ற மலடிநின் செங்கரம் நோக்கிமெய்ச்
செல்வமும் கண்டுகொள்வாள்
செய்தொழில அறியாமற் திகைத்திட்ட கோழையும்
செயலொன்று தேர்ந்துகொள்வான்
வாயற்ற ஊமைநின் வாண்முகங் கண்டதும்
வாழ்த்திடத் தெரிந்துகொள்வான்
வாடியே அலகையால் ஆடிடுங் கேடனவ்
வலகையும் விலகமீள்வான்
பாயற்ற படகுபோல் அலையாமல் மக்களும்
பாகதிக் குயரவேண்டிப்
பதமசிம் மாசனத் திருந்தெமைப் புரந்திடும்
பரமனின் திருவணையே!

'யுவன்' — காம்பொன்

---

## தலைவில் பெரியசந்தானுள் நாயகியின் மகோற்சவம்

### 1954-ம் ஆண்டு ஆவணி 1-ந் திகதி

ஆடி 22: கொடியேற்றம், நவநாள் தினசரி பிற்பகல் 6-30 மணிக்கு ஆரம்பமாகும்.
ஆடி 24: பொன்ரிபிக்கல் வெஸ்பேர்ஸ்.
ஆடி 25: முதற்பெருநாள்—காலை 7 மணிக்குப் பாடற்பூசை.
ஆடி 31: பிற்பகல் 6-30 மணிக்குப் பொன்ரிபிக்கல் வெஸ்பேர்ஸ்.
ஆவணி 1: பெரியபெருநாள்-காலை 6-30 மணிக்குப் பொன்ரிபிக்கல்பாடற்பூசை

1. திவ்விய சற்பிரசாதநாதரின் ஊர்வலம் 29-ந்திகதி வியாழக்கிழமை நடைபெறும். இயற்கை, செயற்கைப் புஷ்பங்கள் மகிழ்வுடன் வரவேற்கப்படும்.

2. ஒருசில வீடுகள் வாடகைக்குஉண்டு. ஏமாற்றமடையாதிருக்க முன்கூட்டியே எழுதி ஒழுங்குசெய்க. கடை வாடகையோ, வீட்டு வாடகையோ ஆடி 15-ந் திகதிக்குமுன் எமக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

3. காய்கறிக்கடைகள், குளிர்ந்தபானக் கடைகள் மாத்திரமே திவ்விய ஆராதனை வேளைகளில் திறந்துவைக்கலாம். ஏனையகடைகள் அவ்வேளைகளில் கண்டிப்பாய் மூடப்பட்டிருக்க வேண்டும்.

4. யாத்திரிகர்களின் சௌகரியத்திற்காகத் தளவாடச் சாமான்கள் வாடகைக்குக் கொடுக்கப்படும். மோட்டர்கார் பாக்கிலே கார்களுக்கு வெயிற்படாது காப்பாற்றத் தலைமறைப்புகள் அமைக்கப்பட விருக்கின்றன. தேவைப்பட்டவர்கள் தயவுசெய்து ஆடி 10-ந் திகதிக்குமுன் அறிவிக்கவும்.

தலைவில், 5-6-54. அதிவண. பரிபாலன சுவாமியார்.

---

# வன்னியின் குரலொலி

சாவகச்சேரிப் பிரதிநிதியும், நீதிஅமைச்சரின் பாராளுமன்றக் காரியதரிசியுமாகிய திரு. வேலுப்பிள்ளை குமாரசாமிஅவர்கள் "பொருளாதார வளத்தைப்பெருக்க யாழ்ப்பாணமக்கள் யாதுசெய்தல் வேண்டும்" என்பதுபற்றிக் கூறியிருக்கும் சிறந்த ஆலோசனை.

"யாழ்ப்பாணடிஸ்திறிக்கில் ஐந்துலட்சம்மக்கள் சஞ்சரித்துவருகிறர்கள். ஒரு குடும்பத்துக்குச் சராசரி கால்ஏக்கர் காணிதான் உண்டு. இயற்கை வளங்களும் இங்கு குறைவு. இன்னும் ஆண்டுதோறும் சனத்தொகையும் பெருகிவருகின்றது. இந்தநிலைமையில் பொருளமுட்டின்றி யாழ்ப்பாணப்பகுதிமக்கள் வாழவேண்டுமானுல், இப்பகுதியில்உள்ளவர்கள் வன்னிப்பகுதியில் குடியேறிவசிக்க முன்வருதல் வேண்டும்."

"மன்னர், வவுனியாப் பகுதிகளில் இன்னும்ஏராளமான காணிநிலங்கள் பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தப்படாது கட்டாந்தரையாகக் கிடக்கின்றன. இவற்றை எங்கள்மக்கள் ஏன் உபயோகப்படுத்தாது இருக்கின்றனர்என்பது என்னல் விளங்கிக்கொள்ள முடியாத பெருமநூதனமாக இருக்கின்றது. மலாயாவையும், இலங்கை அரசாங்க உத்தியோகங்களையும் யாழ்ப்பாணமக்கள் நம்பி வாழ்ந்துவந்தகாலம் மலையேறிவிட்டது. எனவே, இப்போதே உடனுக்குடன் செய்யப்பட வேண்டியது, வவுனியா டிஸ்திறிக்கிற்சென்று குடியேறுவதாகும். வன்னிப்பகுதிகளிற் சென்று கமத்தொழிலில் ஈடுபடுவதை ஒவ்வொருயாழ்ப்பாணத் தமிழ்மகனும் தேசபிமானச் செயலாகக்கருதிச் செய்தல் வேண்டும்.

### தமிழ்மொழி அழியாது

"தமிழ்மக்களின் தன்மானத்தைப்பற்றியும், தமிழ்மக்களின் அமிழ்தினுமினிய தமிழ்மொழியைபற்றியும் மேடைகளிற் சொற்சிலம்பாடுவதால் வயிற்றுப் பசியை நிறுத்திவிட முடியாது. தமிழனுக்குத தன்மானம என்றும்உண்டு. தமிழ்மொழிதான் அவனது தாய்மொழி. தமிழனின் தன்மானமும, தமிழனின் அமிழ்தினுமினிய தமிழ்மொழியும் என்றும் அழியமாட்டா. பறங்கியர், ஒல்லாந்தர், ஆங்கிலேயரது படையெடுப்புகளின்போதுகூட அழியாததமிழ்மொழி என்றும்அழியாது என்பதுஉறுதி. அத்தமிழ்மொழியையும், தன்மானத்தையும வளர்ப்பதற்கு உடலுறுதிவேண்டும். பொருள்முடையால், வயிற்றுப்பசியால், மனச்சோர்வால் உடலுறுதி கெடாது காப்பாற்றிக் கொள்வதற்காகவே நிலங்கள் உள்ள இடங்களிற்குடியேறத் தமிழ்மக்கள் முன்வருதல்வேண்டும்.

"மன்னர்ப்பகுதி முற்றாக இன்னும் தமிழ்மக்களால் பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தப்படாதிருப்பது யாவருக்கும் கவலை அளிக்கத் தக்கது. வன்னிப் பகுதி, வவுனியாப்பகுதி, மன்னர்ப்பகுதிகளில் யாழ்ப்பாண வாலிபச்சிங்கங்கள் சென்று குடியேறுதல் வேண்டும். வவுனிக்குளத்தை எழுபத்தைந்து லட்சரூபா செலவில அரசாங்கம் அடுத்த இரண்டுவருடங்களிற் புதுக்கிஅமைத்து நீர்ப்பாய்ச்சலுக்கு உதவவைக்க இருக்கின்றது. இதை யாழ்ப்பாணத் தமிழ்மககள் பயன்படுத்திக் கொளளவேண்டும்.

### தன்கையே தனக்குதவி

"எல்லாவற்றுக்கும் அரசாங்கத்தை நம்பியிருத்தலும் நன்றன்று. தன்கையே தனக்கு உதவுவதுஎன்பதைத் தாரகமந்திரமாகத் தமிழன்கொள்ளத் தவறக்கூடாது. வடபகுதி அபிவிருத்தியுற வேண்டுமானுல் அதைச் சிங்களச்சகோதரர்களைபகைத்துச் செய்துகொள்ளலாம்என்று முனைவது பைத்தியகாரத் தனமாகும. அரசியலில் உண்மையை உண்மையாகக் கண்டறிந்து ஆவனசெய்தல்வேண்டும். இந்நாட்டில் தமிழ்மக்களும் இருக்கிறர்கள் என்பதைச சிங்களச்சகோதரர்கள் உணர்ந்து கருமமாற்றுதல வேண்டும். அதேபோன்று தமிழ்மக்களும் இந்நாட்டிற் சிங்களமக்களும் வாழ்ந்துவருகின்றார்கள் என்பதைஉணர்ந்து கருமமாற்றுதல் வேண்டும. இவ்வுணர்ச்சி இருபகுதியாருக்கும உதித்துவிட்டால் வேற்றுமைகள்யாவும் அகன்றுவிடும என்று நான்சொல்லத் தேவையில்லை.

"வன்னிமுதலிய பகுதிகளுக்குச்சென்று குடியேறுவதை முன்னின்று நடாத்துவதற்கு ஒருசங்கத்தை அமைத்துக் கொள்வது நற்பயன் அளிக்கும என்று நம்புகின்றேன்."

---

### ஆனி மாதம்

பொதுக்கருத்து :— பாவச்சுமையின்கீழ் வருந்துவோர் யேசுவின் திருஇருதயத்தினிடம் இரக்கமும், இரட்சணியமும் தேடும்படியாக வேண்டிக் கொள்வது.

மிஷன்கருத்து :— கத்தோலிக்க உலகமுழுவதும் சீனுவில் வேதகலாபனையால்வருந்தும் திருச்சபையோடு தனக்குள்ள ஐக்கியத்தைத் தீரஉண[illegible]படியாய் மன்றாடிக்கொள்வது.

**Amateur Photographers in Jaffna**

*Please note:*

ANSCO COLOR film, size 120 is available from St. Joseph's Catholic Press.

Advise as to whether your camera is fit or not will be given free.

**Price per film 7/50**

Developing charges extra.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பக்கம்



## அண்ணா சொல்வது:

அருமைச் சகோதரங்களே!

இன்று சற்பிரசாதத் திருநாள். யேசு இரட்சகர் பெரிய வியாழக்கிழமை திவ்விய நற்கருணையை ஏற்படுத்தினர். அந்தக் கருணையை நினைத்து எங்கள் நன்றித் துதியையும், நேச நமஸ்காரங்களையும் எல்லோரும் அறிய எடுத்துக் காட்டுவதற்கே இத் திருநாள் ஏற்படுத்தப் பட்டது.

விசாரணைப் பங்குகளிலே அடுத்துவரும் ஞாயிற்றுக் கிழமை தான் கொண்டாட்டம இருக்கும். காலை ஆடம்பர பாடற்பூசை. நாள் முழுவதும ஆராதனையும் இருக்கக் கூடும். பின்னேரம் நற்கருணை நாதர் உலா.

உங்களுக்கு இதிலே என்ன பங்கு? இந்தச் சுற்றுப் பிரகாரத்தில் பங்கு பற்றுவீர்கள். வீதிகளை அலங்கரிப்பீர்கள். பாதையில் மணல் பாவுவீர்கள். தோரணங்கள் தூக்குவீர்கள். வாழை, கமுகு நாட்டுவீர்கள். பந்தர்கள் அமைப்பீர்கள். தீபம் ஏற்றுவீர்கள். தூபங் காட்டுவீர்கள். உங்கள் ஆராதனை, நேசம், நன்றியைக் காட்ட மலர் சொரிவீர்கள். எங்கள் அரசரின் பவனியை அழகுற நடத்துங்கள். சுபம்!

உங்கள் அன்புள்ள, அண்ணா.

## என்ன உதவி செய்ய முடியும்?

அன்றும் இன்றுபோல எனக்கு நல்ல ஞாபகமாய்இருக்கிறது. ஒரு பெரிய போர்வை கொண்டு என்னை மூடியிருந்தனர். எனக்கோ மாணம் வந்தாற்போல் இருந்தது. நானும் உலக கவலைகளை மறந்து எனது ஏககதியாகிய யேசுவை நினைத்துக் கொண்டு இருந்தேன். டக்றர் சேறம் எனது கையிலும், முதுகிலும் இரு ஊசிகள் ஏற்றினர். எனது கண்கள் மூடிக் கட்டப்பட்டு இருந்ததால் நான் அவரைக் காணவில்லை. ஆனல், அவர் குரலோ அது டக்றர் சேறம்தான் என்றது. சொற்ப நேரத்தில் நான் அறிவை இழந்தேன். அடுத்தநாள் காலை நான் ஆஸ்பத்திரியிலே எனது கட்டிலில் இருப்பதாக மட்டும் உணர்ந்தேன்.

எனக்கோ பொறுக்க முடியாத வேதனை. என் தாயார் கண்ணீர் பெருகும் கண்களுடன் அருகிலே நின்று எனக்குக் காற்று வீசிக்கொண டிருந்தா. டக்றர்மார் அடிக்கடி என்னை வந்து பார்த்தனர். நான் பிழைக்க மாட்டேன் என்று அவர்கள் கதைப்பது என் காதிலே விழுந்தது. நான் வேதனையை உணராதிருக்க எனக்கு விறைப்பு மருந்து தந்தனர். குருவானவர் ஒருவர்வந்து கடைசித் தேவதிரவிய அனுமானங்களை முடித்தார்.

பிறகு அடுத்தமுறை அவர் வந்து, தாம் என்னிடம் ஓர்உதவி கேட்கப் போவதாய்க் கூறினர். சாகிற தருவாயில் இருக்கும் என்னல் உங்களுக்கு என்ன உதவி செய்ய முடியும்? என்றேன். அப்போது அவர் சொல்லுவார்: "உனக்கு அடுத்த அறையில் ஒருபெரும் பாவி இருக்கிருள்; அவள் பதினெட்டு வருடங்களாகப் பாவியாகச் சீவிக்கிருள்; தற்போது அவள் சாகுந் தருவாயில் இருக்கிருள்; இன்னும் சிலமணி நேரம்கூட அவள் சீவித்திருக்கமாட்டாள்; எவ்வளவோ புத்திமதி சொல்லிப் பார்த்தேன்; செபித்தேன்; இன்று பூசையும் ஒப்புக் கொடுத்தேன்; ஆனல், அவள் மனதை அசைக்கத் தானும் முடியவில்லை; நீ உனது வேதனையை அப்பாவி மனந் திரும்பும் படியாக ஒப்புக் கொடுப்பாயா?" என்ருர்.

நான் அப்படியே செய்வதாக உறுதி கூறினேன்.

சிறிது நேரம் சென்றதும் தாதிமார் எனக்கு நித்திரை வரவும், நான் நோவை உணராது இருக்கவும் மருந்து தரும்படி என்னிடம் வந்தனர். நான் அவைகள் இப்போது எனக்கு அவசியம் இல்லை என்று சொல்லி அவர்களை அனுப்பிவிட்டு எனது வேதனையை அந்த ஆத்துமம் மனந்திரும்பும் படியாக ஒப்புக் கொடுத்தேன். சில மணி நேரஞ் சென்றதும் அடுத்த அறையிலே அழுகுரல் கேட்டது. தாதிமார் அந்த அறைக்கு ஓடினர்கள். சுவாமியாரும் வந்தார். அந்தப்பெண் தனது பாவங்களை நினைத்து மனஸ்தாபப் பட்டு அழுவதுதான் அந்தச் சத்தம் என்று அறிந்தேன். கடைசித் தேவதிரவிய அனுமானங்கள் பெற்று அன்று மாலை அவள் அமைதியாக மரித்தாள்.

பிறகு சுவாமியார் என்னிடம்வந்து தமதுகரங்களைக் காட்டிச் சொல்லுவார்: "இனறைக்கு யேசுநாதரை இந்தக் கரங்களில் ஏந்திய எனக்கு உனது உதவி இல்லாமல் அந்த ஆத்துமத்தை மனந்திருப்ப முடியாமற் போனது; ஆண்டவர் செபத்திலும், தவத்தை விரும்புகிருர்" என்று சொல்லிப் போனர். நானும் படிப்படியாகக் குணம் அடைந்தேன்.

மேரி தெரேஸ் மானெல்
அர்ச். அன்னம்மாள் பாடசாலை,
மேட்டுத்தெரு, கொழும்பு.

## ஞானப்பூச்செண்டு

சென்றவாரம் விடுத்த வேண்டுகோளுக்கு இசைந்து அநேக பாடசாலைகள் ஞானப் பூச்செண்டுகள் அனுப்பியிருக்கின்றன. அவைகளின் விபரம் அடுத்த கிழமை தரப்படும். இவ்வாரமும் தொடர்ந்து அனுப்புங்கள்.

## பிள்ளைகளும் செபமும்

தாய் தந்தையரே! உங்கள் மக்களைத் திருத்தும்படியாக நீங்கள் சாதாரணமாகக் கையாளும் வழிவகைகள் என்ன? ஏச்சும், பேச்சும, அடியும், ஆக்கினையும் அல்லவா? ஆனல், அவர்களை எவ்வளவாகப் பேசினலும், அடித்தாலும் அவர்கள் சற்றும் திருந்துவதாய் இல்லையே என்று நீங்கள் மீண்டும் மீண்டும் முறைப்பட வில்லையா? உங்கள் பிள்ளைகளைத் திருத்த இவைகளே தகுந்த வழிவகைகள் என்று நீங்கள் எண்ணுவது பெருந் தவறு. தேவ அருள் இல்லாது அவர்களைத் திருத்தி நல்லொழுக்கப் படுத்த முடியாது. இந்தத் தேவஅருளை முக்கியமாகச் செபத்தினலே அடையலாம்.

செபம் சுபாவ முறைக்கு மேலான வல்லமை உள்ளது. செபத்தினலேயே சுத்தவாளர் செத்தவர்களை உயிர்ப்பித்தும், கன்னெஞ்சரான பாவிகளை மனந் திருப்பியும், வேறும் அநேக நவமான காரியங்களைச் செய்தும் இருக்கிருர்கள். சுத்தவாளர் மாத்திரமல்ல, அநேக பெற்ருரும் செபத்தினல் தங்கள் துட்டப் பிள்ளைகளை மனந்திருப்பினர்கள். அன்னை, தந்தையரே! நீங்களும் இப்படிச் செய்தால் என்ன? செய்தால் நல்லதுதான் என்று சொல்வீர்கள். ஆனல், அப்படிச் செய்கிறீர்களா? செய்தாலும் கிரமமாய்ச் செய்கிறீர்களா? ஒரு நோயைக் குணமாக்க வேண்டா வெறுப்பாய் இடைக்கிடை மாத்திரம் மருந்து பாவிப்பது போதாது. அதை முறையாயும், கிரமமாயும் பாவிக்க வேண்டும. அவ்வாறே மக்களின் துர்க் குணங்கள், துர்ப்பழக்கங்களை மாற்றி அவர்களை நல்லொழுக்கப்படுத்த வேண்டா வெறுப்பாய் இடைக்கிடை மாத்திரம் மன்ருடுவது போதாது. செபம் சித்திக்க வேண்டுமாகில் பக்தியோடும், உறுதியான நம்பிக்கையோடும், உங்கள் மன்ருட்டுக் கிடைக்குமட்டும் விடாப்பிடியாயும் செபஞ் செய்து வரவேண்டும். அன்றியும் பிள்ளைகளும் அப்படி மன்ருடிவரப் பண்ணுவதும் அவர்களைத் திருத்த உத்தம வழியாகும். அவர்கள் தினமும் சர்வேசுரனை நோக்கி: "ஆண்டவரே! எனது துர்க்குணங்கள், துர்ப் பழக்கங்களை அகற்றி விட்டு, எனக்கு நற்குணங்கள், நற்பழக்கங்களையும், மெய்யான தேவ நேசம், பக்தி விசுவாசத்தையும் தந்தருளும்" என்று மன்ருடி வரப்பண்ணுங்கள். உங்கள் பிள்ளைகளின் குறை குற்றங்களைப் பிறரிடஞ் சொல்லி முறையிடுவதால் ஆகப்போவது ஒன்றும் இல்லை. சர்வேசுரனுக்கே சொல்லி முறையிடுங்கள். அவரிடமே உதவியை இரந்து மன்ருடுங்கள். அவரே உங்கள் பிள்ளைகளைத் திருத்திச் சீர்ப்படுத்தக் கூடிய வல்லமை உடையவர். அவர் உங்கள் வேண்டுதலுக்கு இலகுவாய் இரங்கத் தக்கதாகச் செபத்தோடு இயன்ற தபமும், தான தருமமுஞ் செய்து வாருங்கள்.

மிக்கேல் யூலியஸ்
சென். ஜேம்ஸ், யாழ்ப்பாணம்



## பறந்தது

'ஜெயம்'

கோழி மேலே பறந்தது
கூரை மேலே பறந்தது
கிளியும் மேலே பறந்தது
கிளையின் மேலே பறந்தது
சொக்கு மேலே பறந்தது
கொஞ்சம் உயரப் பறந்தது
பட்டம் மேலே பறந்தது
பனையின் மேலே பறந்தது
பருந்து மேலே பறந்தது
பரந்த வானிற் பறந்தது
கப்பல் மேலே பறந்தது
காத தூரம் பறந்தது
எந்தன் மனமும் பறந்தது
எட்டாத் தூரம பறந்தது

## மூளைக்கு வேலை

நாயகம், திரை, இராசா என்ற மூன்று சகோதரும் சந்தைக்குச் சென்ருர்கள். நாயகம் 75 மாம்பழமும், திரை 50 மாம்பழமும், இராசா 25 மாம்பழமும் கொண்டு போனர்கள். அன்று சந்தையில் பழங்கள் அதிகம் இருந்தபடியால் அவைகளின் விலை அதிகம் குறைவாய் இருந்தது. நாயகம் ஒரு விலையைக் குறித்து அந்த விலைக்குப் பழங்களை விற்று மிகுதியை வீட்டுக்குக் கொண்டுபோவோம் என்று கூறினன். மூவரும் மூன்று இடங்களில் வைத்துவிற்ருர்கள். மூவரிடமும் பழங்கள் மீந்திருந்தன. வீடு செல்லும் பொழுது வழியிலே சந்தித்த ஒருவர் ஓர் குறித்த விலைக்கு மூவரிடமும் இருந்த பழங்களை வாங்கிக் கொண்டு அவரவருக் குரிய பணத்தைக் கொடுத்தார். மூவரும் தாங்கள் பெற்ற பணத்தை எண்ணிப் பார்க்கையில் மூவரும் சம தொகையான பணம் வைத்திருக்கக் கண்டார்கள்.

1. சந்தையில் ஒவ்வொருவரும் எத்தனை பழங்கள் என்ன விலைக்கு விற்ருர்கள்?
2. வழியில் ஒவ்வொருவரும் எத்தனை பழங்கள் என்ன விலைக்கு விற்ருர்கள்? [விடை அடுத்த இதழில்]

## சாக்குப் போக்கு

"செம்மறிப் புருவையின் பந்திக்கு அழைக்கப் பட்டவர்கள் பாக்கியவான்கள்" என்று அர்ச். அருளப்பர் காட்சி ஆகமத்தில் எழுதியிருக்கிருர்.

திவ்விய யேசு — உலக பாவங்களைப் போக்குகிற தேவசெம்மறிப் புருவை— தமது திருச்சரீரத்தையும், திரு இரத்தத்தையுமே போசன, பானமாகக் கொடுத்து இந்தத் திவ்விய விருந்திற்குச் சகலரையும் அழைக்கிருர்.

இந்த அன்பின் அழைப்புக்குச் செவிசாய்ப்பவர் சிலர். சாட்டுப் போக்குச் சொல்லி இந்தத்திவ்விய விருந்தை விலக்குபவர் பலர். உலகபற்றுதல்களாலே இந்தத் தெய்வீக மன்னவை அலட்சியம் செய்பவர் அநேகர்.

புது மனை, புதுச் சோடு மாடு, புது மனையாள் என்று சாட்டுச் சொல்லி அழைக்கப் பட்டோர் விருந்துக்குப் போகத் தவறினர்கள் எனத் திவ்விய யேசுவே உவமையில் சொல்லியிருக்கிருர்.

சாக்குப் போக்கின் நிமித்தம் இந்தத் தெய்வீக மன்னவை அலட்சியம் செய்பவர் பரலோக வீட்டின் நித்திய பந்தியையுமே இழந்து போவார்கள் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

(ஞாயிறு சுவிசேஷத்தைக் கவனிக்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பவுலின் சுவாமியார்

பரீஸ்நகர கோவில் ஒன்றின் முன் மண்டபத்தில் நின்று ஓர் ஏழைப் பிச்சைக்காரன் தினந்தோறும் பிச்சை வாங்குவது வழக்கம். அவன் பெயர் சந்தியாகு. எவ்வளவு தருமப்பணம் கிடைத்தபோதிலும் அவன் முகத்தில் சந்தோஷமே இராது. பிறர் கொடுக்கும் பணத்தை வாங்கும்போது நன்றியறிதலாகச் சற்றே தலைகுனிவதல்லாமல் அவன் வாய்திறந்து பேசியதை அதுவரை எவரும் கேட்டதில்லை. அவன் அணிந்திருந்த பழைய துணி தற்செயலாய் விலகும்போது, அவன் கழுத்தில் ஓர் தங்கச்சிலுவை தொங்குவதைச் சிலர் கண்டதுண்டு.

அந்தக்கோவிலில் திவ்வியபூசை நிறைவேற்ற ஓர் இளம் குருவானவர் வருவார். அவர் கோவில்வாசலில் வந்ததும் இரண்டு பிராங் எடுத்துச் சந்தியாகுக்குக் கொடுத்துவிட்டுத்தான் உள்ளே போவார். இவர் பரீஸ் பட்டணத்தில் வசித்திருந்த ஓர் பெரிய பிரபுவின் மகன். தமது சொத்துகள், சுதந்தரங்களையெல்லாம் விற்றுத் தரித்திரருக்குக் கொடுத்தபின் தேவஊழியத்துக்குத் தம்மை முழுதும் கையளித்த ஓர் தருமசீலர். பிச்சைக்காரனுக்கு அவர் யாரென்பது தெரியாது. குருவானவருக்கு அவன் யாரென்பது தெரியவராது. ஆயினும் ஒருவரை ஒருவர் நேசித்தார்கள்.

ஒரு நாள் நமது குருவானவர் கோவிலுக்குப் போகும்பொழுது பிச்சைக்காரனைக் காணவில்லை. இவ்வாறு சிலநாள் அவன் அங்கு வாராததால் அவன் ஏதோ வியாதியாய் இருக்கலாமென்று நினைத்து அவர் ஓர் நாள் அவனைத் தேடிக்கொண்டு போனார். கடைசியாகச் சத்திரத்தின் அறை ஒன்றில் அவன் எவர் உதவியுமின்றித் தன்னந்தனியே படுத்திருக்கக் கண்டார். அவரைக் கண்டதே பிச்சைக்காரன் தனது உபகாரியாகிய குருவானவரைப் பார்த்து: "சுவாமீ! இந்த நிர்ப்பாக்கிய பாவியாகிய என்னைத் தேடிக்கொண்டு வந்தீர்களா? என்ன கரிசனை! என்ன கருணை!! நான் இந்த அன்புக்குப் பாத்திரவான் அல்லவே" என்று கலங்கிய கண்களுடன் மொழிந்தன.

"குருமார் நிர்ப்பாக்கிய பாவிகளின் பிரிய சிநேகிதரென்று உனக்குத் தெரியாதா? மேலும் நாம் இருவரும் நெடுநாள் மித்திரர் என்பதை மறந்தாயா?" என்று புன்னகைபூத்த வதனத்துடன் விடைபகர்ந்தார் நமது சின்னச்சுவாமியார். "சுவாமீ! நான் எப்படிப்பட்ட மனிதன் என்று தாங்கள் அறிந்தால் இவ்வளவு பட்சத்துடன் பேசமாட்டீர்கள்; கடவுளாலே சபிக்கப்பட்ட பெரும்பாவி நான்; தேவனால் தண்டிக்கப்படும் ஓர்பெருந் துரோகி நான்; எவராலும் வெறுக்கப்படவேண்டிய அயோக்கியன் நான்" என்றான் பிச்சைக்காரன்.

"அப்படி ஒருபோதும் சொல்லாதே; சருவேசுரன் அளவற்ற இரக்கமுள்ளவர்; நமது நல்லதகப்பன்; எவ்வளவு பெரிய பாவியாயிருந்தாலும் நல்ல மனஸ்தாபப்பட்டு அவரிடம் மன்னிப்புக்கேட்டால் கட்டாயம் மன்னிப்புத் தருவார்என்று உனக்குத்தெரியாதா?" என்றார் நமதுசுவாமியார்.

இதைக்கேட்டதே அந்த மனிதன் படுக்கையைவிட்டு எழுந்து உட்கார்ந்துகொண்டு: "சுவாமீ! முப்பதுவருடகாலமாக மனஸ்தாபப்படுகிறேன்; பிரயோசனமில்லை"என்று சொல்லிவிட்டு அதற்கப்பால் பேசமுடியாமல் திரும்பவும் படுத்துக்கொண்டான். சுவாமியார் அவனுடன் வெகு அன்பாய்ப்பேசி ஆறுதலளித்தார். அப்போது அவனுடையஇருதயம் இளகித் தன்னை இவ்வளவுகாலமும் உபாதித்துவந்த மனக்குத்தலின்காரணத்தை அவருக்குச் சொல்லத்தொடங்கினான்:

"சுவாமீ! நான் பரீஸ்பட்டணத்தில் ஓர்பெரிய பிரபுவின்வீட்டில் வேலைகாரனாக இருந்தேன். பிரபுவும், சீமாட்டியும் என்னைப் பிள்ளைபோல் வளர்த்தார்கள். படிக்கவைத்தார்கள். அன்புகாட்டிப் பராமரித்துவந்தார்கள். இந்தப்பிரான்ஸ்தேசத்தில் முப்பது வருடங்களுக்குமுன் நடந்தயுத்தத்தில் பரீஸ்நகரிலிருந்த பெரியபிரபுக்களைப் பிடித்துக் கொன்றுபோட்டார்கள். என துஎசமானும், எசமாட்டியும், இரு பெண்மக்களும், ஒருசிறுமகனும் மாளிகையைவிட்டு இரவில்வெளியேறி இரகசியமான ஓர் இடத்தில் ஒளித்துகொண்டார்கள். இந்தவிஷயம் எனக்குமாத்திரம்தெரியும். சுவாமீ, அவர்களால் நேசிக்கப்பட்டநான் — நன்றிகெட்ட துரோகியாகியநான் — சபிக்கப்பட்ட பாதகனாகிய நான் கலகக்காரரிடம் அவர்களைக் காட்டிக்கொடுத்தேன். அவர்களுடையசொத்து, சுதந்திரங்களைக் கைப்பற்றும் துர்எண்ணத்துடன் இந்தப்பாதகத்தைக் கட்டிக்கொண்டேன். ஆ! சுவாமீ, என்னைநேசித்த பிரபுவும், சீமாட்டியும், இருபெண்மணிகளும் என்கண்முன்பாகக் கொலையுண்டார்கள்; அவர்களின்மகன் சிறுவனாயிருந்ததால் அவனை விட்டுவிட்டார்கள்; பவுலின்தான் அவன்பெயர்.

"இந்த முப்பதுவருஷமாய் என் துரோகத்தை நினைந்து மனதுருகிக் கண்ணீர்சிந்தினேன். ஆனால், என் மனச்சா[illegible] இருதயத்தை எப்போதும் அரித்துக்கொண்டேயிருக்கிறது. நான் போகிற இடமெல்லாம் என்எசமானின்உருவம் என்னைப்பின்தொடர்ந்தே வருகிறது. 'அதோபாருங்கள், அந்தத்திரைக்குப் பின்னால் இருக்கும்படத்தை' என்று தனக்குஎதிரில் தொங்கும்திரையைக் காண்பித்தான். பின்னர் தன்கழுத்தில் அணிந்திருந்த தங்கச்சிலுவையையும் காண்பித்து: "ஆண்டவர்என்னை மன்னிக்கும்படி மன்றாடுங்கள்சுவாமி" என்று சொல்லிமுடித்தான்.

குருவானவர் என்ன சொல்வார். அப்படியே முழங்காலில் இருந்தார். அவருடையமுகம் வெளுத்துப் போயிற்று. பிறகுஎழுந்து தம்மேல் சிலுவைவரைந்து தமது மனதைத் தைரியப்படுத்திக்கொண்டு திரையைத் திறந்தார். இரண்டுபடங்கள் காணப்பட்டன. சிறிதுநேரம் அவற்றை உற்றுப்பார்த்தார். கண்களினின்று கண்ணீர் ஆறுபோல் மளமளவென்றுபுறப்பட்டது. நோயாளியைப் பார்த்து: "சந்தியாகு! நீ இப்போது பாவசங்கீர்த்தனம்செய்; பிறகு உனக்கு ஓர் இரகசியம் சொல்வேன்"என்றார். சந்தியாகு பாவசங்கீர்த்தனம்செய்தான். சுவாமியார் பாவப்பொறுத்தல் ஆசீர்வாதம்கொடுத்தார். பின்பு அவனைப் பார்த்து: "சருவேசுரன் உனக்கு மன்னிப்புஅளித்தார்; அவருடைய சிநேகத்தைமுன்னிட்டு நானும முழு இருதயத்தோடு உன்னை மன்னிக்கிறேன்; ஏனெனில், என்பிதா, மாதா, இருசகோதரிகள் எல்லோரும் உன்னால் கொலையுண்டார்கள்; அப்போது மரணத்துக்குத் தப்பின சிறியபவுலின்தான் இப்போது உன் அருகிலிருக்கும் குருவானவர்" என்றார் நமதுபவுலின் சுவாமியார்.

இவற்றைக்கேட்டதும் பிச்சைக்காரனின்முகத்தில் சகிக்கமுடியாத கவலைக்குறிகள் காணப்பட்டன. சிரசை நிமிர்த்தி ஏதோசொல்ல வாயெடுத்தான். பேசமுடியாமல் திரும்பவும் படுக்கையில்வீழ்ந்தான். குருவானவர் அருகிற்சென்று பார்த்தபோது, சந்தியாகு இறந்துபோனதைக் கண்டார்.

பிள்ளைகளே! ஓர் குருவானவரின் அன்பு அவநம்பிக்கைப்பட்ட பெரும் பாவியை மனந்திருப்பினது. தமது குடும்பத்தை அடியோடு அழித்த நன்றிகெட்ட துரோகியை முழு மனதோடு மன்னிக்கிறார். சத்துராதிகளை மன்னித்து அவர்களைச் சிநேகிக்க வேண்டுமென்னும் தேவகட்டளையை இந்தநல்லகுருவானவர் வெளிப்படையாய் நிறைவேற்றினார். ஒருவன் எவ்வளவு பெரியபாவியாய் இருந்தபோதிலும் தனதுபாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு மன்னிப்புக்கேட்டால் பரமபிதா எப்போதும் தயவாகஅவனை மன்னித்தருள்வார்என்பதை இச்சரிதையிலிருந்து அறிந்துகொள்ளலாம்.

நா. இந்திராணி
அர்ச். அன்னம்மாள் பாடசாலை,
மேட்டுத்தெரு, கொழும்பு.

## யுசெப்பெ சார்த்தோ குருமடஞ் செல்லுகின்றார்



சென்றமுறை அர்ச். பத்தாம் பத்திநாதரின் பாலியப்பருவத்தைப் பற்றி விபரித்தோம். இம்முறை அவர் குருமடஞ் சென்ற வகையை எடுத்துக் கூறுகிறேம்.

உயர் நிலைக் கலாசாலையில் படிக்கும்போது, பெப்போ வகுப்பில் முதல் இடம் வகிப்பார். உல்லாசப் போக்கு இருந்தாலும், பெற்றோருக்கு உதவி செய்ய ஊக்கமாய் இருந்தார். பெப்போ ஓர் குருவாகவரவேண்டும் என்று மனதில் எண்ணங்கொண்டார். ஆனால், அதற்குப் படிக்க வேண்டுமே. அதற்கு வேண்டியசெலவு செய்ய அவர் குடும்பத்தினருக்கு இயல்பு இருக்க வில்லை. பெப்போவும, அவர் தாயும ரீயெஸ் மாதாவிடம் நெடுநாளாக மன்றாடிக் கொண்டு வந்தார்கள். பெப்போவின் கட்டளைக் குருவான டொன் தீத்தோ சுவாமியார் வெனிஸ் நகரில் இருந்த கருதினல் மொனிகோ ஆண்டவரிடம அப்பையனுக்கு வித்தியா தானஞ் செய்யும்படி கேட்டார்.

கருதினல் மொனிகோ ஆண்டவரும் ரீயெஸில்தான் பிறந்தவர். ஆனால் அதற்கும், அந்த ஏழைக் கமக்காரக் குடும்பத்திற்கும் என்ன தொடர்பு? மேலும் கருதினல் ஆண்டவரிடம் உதவி கேட்டு வருங் கடிதங்களிலே மணியைத்தெரிந்து, பதரைத் தள்ளிவிடும் "தவறுவாம்" ஒன்று காரியதரிசிகளுக்கு உண்டல்லவா!

அநேகநாட்கள் சென்றபின் கருதினலின் மறுமொழி வந்தது. பெப்போ ஆவலாய் விரும்பிய வித்தியா தருமங் கிடைத்தது. சொற்ப நாட்களில் பதுவையில் இருக்கும் குருமடத்தில் சேர ஆயத்தப் படுத்தினர். புறப்படும் நாளும் வந்தது. அவருக்குத் தேவையான யாவும் வாசலில் நின்ற வண்டியில் வைத்தாய் விட்டது.

அவருடைய தாயார் மகனின் பிரிவாற்றாது அழுதாள். கண்ணீருடன் கலந்த முத்தங் கொடுத்தாள்.

ரீயெஸிலுள்ள மக்கள் எல்லோரும் சேர்த்துக் கொடுத்த சிறுதொகைப் பணத்தை டொன் தீத்தோ சுவாமியார் பெப்போவின் வழிச்செலவுக்காக அன்பளிப்பாய் உபகரித்தார்.

பெப்போவின் தகப்பனார்மகனுடைய கரத்தைத் தனது இருகரங்களாலும் பற்றி ஆசிகூறி விடையளித்த பொழுது குடும்பத்தவர் எல்லோரும் கூட நின்றார்கள்.

## அறிவுச் சுடர்

1\. கத்தோலிக்க உலக முழுவதிலும் பாலகயேசுவின் அர்ச். தெரேசம்மாள்போல் கட்டியெழுப்பப்பட்டனவாய் எத்தனை ஆலயங்கள் இருந்துவருகின்றன?

ஏறக்குறைய 2,000 ஆலயங்கள் இருந்துவருகின்றன. இவற்றிலெல்லாம் மிகப்பிரமாண்டமானது, லிசியேபதியிலுள்ள அர்ச். தெரேசம்மாளின் பஸிலிக்கா எனும் மகாலயமேயாகும்.

2\. பரிசுத்தபாப்பரசர் எத்தனை வருடங்களின்முன் குருப்பட்டம் பெற்றார்? எங்கே தமது முதற்பூசையை நிறைவேற்றினார்?

55 வருடங்களின்முன் குருப்பட்டம்பெற்றார். ரோமை நகரிலுள்ள மேரிமேஜர் மகாலயத்திலுள்ள போர்க்கீஸ் சிற்றாலயத்திலே முதற் பூசையை நிறைவேற்றினார்.

3\. ஐரோப்பிய வரலாற்றிலே மத்தியகாலங்கள் எனப்படுவன எவை?

ரோமைச் சக்கிராதிபத்தியத்தின் விழுகைக்கும், தற்கால வரலாற்றின் கால ஆரம்பத்துக்கும் இடையிலுள்ள பகுதியேயாகும். அதாவது கி. பி. 500-ம் ஆண்டுக்கும், 1500-ம் ஆண்டுக்கும் இடையிலுள்ள ஆயிரம்ஆண்டுகளை மத்தியகாலங்கள் என்பதில்அடக்கலாம்.

4\. அர்ச். பத்தாம்பத்திநாதராலே நியமனஞ்செய்யப்பெற்ற மேற்றிராணிமார், அதிமேற்றிராணிமார்களில் தற்போது எத்தனைபேர் சீவந்தராயிருக்கின்றனர்? இவர்களில் அதிகம்விருத்தாப்பியர்களான இருவர்யார்?

41 பேர் சீவந்தரா யிருக்கின்றனர். இவர்களிலே கிலாலோநகர் மேற்றிராணியாராய் இருந்துவருகின்ற பொகாட்ரிஆண்டவர், அர்ச். பத்தாம் பத்திநாதர் பாப்பானவராகத் தெரியப்பெற்று ஒருவருடகாலத்துள் — அதாவது 1904-ம்ஆண்டு மேற்றிராணியாராயினர். தற்போது இவருக்குவயது 94. ஆஸ்திரேலியாவிலே மெல்போண் நகர் அதிமேற்றிராணியாராய் இருந்துவருகின்ற மனிக்ஸ்ஆண்டவர் 1912-ம் ஆண்டு மேற்றிராணியாராயினர். இவருக்குத் தற்போதுவயசு 90.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பல தேசங்களில்

### கம்யூனிஸ்ததலைவர் விலகினர்

இந்தியாவிலே கோதாவரிப்பகுதியில் ஓர் முக்கிய கம்யூனிஸ்த தலைவரும், ஆந்திரசட்டசபை அங்கத்தவருமான திரு. சி. வி. கே. ராவ்என்பவர் கம்யூனிஸ்தகட்சியிலிருந்து விலகியிருக்கினர். ஆந்திரநாட்டின் பொதுவுடைமைத் தலைவர் நிலையானகொள்கைகள் எதுவுமில்லாது சந்தர்ப்பத்திற் கேற்றவாறு நடந்துகொள்ளுகிறாரென்றும், மார்க்ஸ், லெனின் கொள்கைகளுக்கு மாறாக நடக்கிறாரென்றும் அவர்கூறுகின்றார். இவர் கம்யூனிஸ்தகட்சியிலிருந்து வெளியேறிய இரண்டாவது ஆந்திர நாட்டுச் சட்டசபைஅங்கத்தவராவர்.

* * *

### நெதர்லாந்தின் முட்டைவியாபாரம்

உலகில் மிகப்பெருந்தொகையான முட்டைகளைப் பிறநாடுகளுக்கு ஏற்றுமதிசெய்து முட்டைவியாபாரத்திலே முதன்மைபெற்றிருக்கும்நாடு நெதர்லாந்தென அறியப்படுகின்ற ஒல்லாந்தேயாகும். அதனால்இன்று அந்நாடு கோழி, தாரா, வாத்து ஆகியாம் வீட்டுப்பறவைகளை வளர்க்கும்கைத்தொழிலிலே சிறந்துவிளங்குகின்றது. 1907-ம் ஆண்டிலே பிறநாடுகளிலிருந்து முட்டைகளை இறக்குமதிசெய்த ஒல்லாந்து சென்ற 1953-ம் ஆண்டிலே 168 கோடிமுட்டைகளைப் பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்திருக்கிறது. முந்திய 1952-ம் ஆண்டின் ஏற்றுமதியோடு ஒப்பிட்டுப்பார்க்குமிடத்துஇத்தொகை நூற்றுக்கு 21 விகிதம் கூடியதாகும்.

* * *

### கடவுளென்றால் கிலி ஏனோ?

"சோவியற்ருஷிய அதிகாரபீடமானது மற்றெதைக் காட்டிலும், அதிகமாக அஞ்சிநடுங்குவது கடவுள் என்று கேட்கும்போதும், சமயசெல்வாக்கைக் காணும்போதுமே; இருப்பினும் ருஷியமக்களின் மதப்பற்றுதலைக் கம்யூனிஸ்தார்களினால் அழிக்க முடியவில்லை." இவ்வாறு, சோவியற் இரகசியப்பொலிசில் கப்பிணுயிருந்து, கம்யூனிஸ்தார்களின் கொலைக்கருவியாக இருக்கஉடன்படாது, தற்சமயம் சுதந்திர உலகிலே அடைக்கலம்தேடிக் கொண்டிருக்கும் நிக்கலாய் கோக்கிலோ என்பவர் தெரிவித்திருக்கிறார்.

மேற்குஜேர்மனியிலிருந்துகொண்டு இயங்கும் ருஷியஅகதிகள் அடங்கிய "தேசீயதொழிற்சங்க"த்தைக்கண்டும் மஸ்கோ கிலிகொண்டிருக்கிறதென்று இவர்கூறினர். கம்யூனிஸ்த கொடுங்கோலிலிருந்து ருஷியமக்களை விடுவித்து உண்மையான மக்கட்பொறுப்பாட்சியை நிலைநிறுத்த இச்சங்கம் உழைத்துவருகிறது. இச்சங்கத்தின் முக்கியஸ்தரான ஒக்லோவிச்சைக் கொல்லுமாறுதான் சோவியற் இரகசியப்பொலிஸ் இவருக்குக்கட்டளையிட்டிருந்தது. ஆனால், அந்தப்பாதகத்தைச் செய்யமறுத்து, யாரைக்கொல்லுவதற்காக ஏவப்பட்டாரோ அதேஒக்லோவிச்சின் துணையைநாடிச் சுதந்திர உலகில் தஞ்சம்புகுந்தார் இவர்.

"என் மனைவியைக் கலந்தாலோசித்த பிறகே மேற்குஉலகுக்குத் தப்பிவருவதென்று தீர்மானித்தேன்; எனக்கும் அவளுக்கும் இந்தக்கொலையைச்செய்ய மனம்ஒப்பவில்லை" என்றார். சோவியற் ருஷியா துணிந்து மற்றோர்யுத்தத்தில் இறங்காது; அதற்குக்காரணம் சமாதானத்தைவிரும்பும் ருஷியமக்கள் அதை ஆதரிக்க மறுப்பவர்கள் என்றே தான் அபிப்பிராயப் படுவதாகச் சொன்னார்.

ஸ்ராலினின் கட்டளைப் பிரகாரம் மெக்சிக்கோவில் வசித்துவந்த டிறொட்ஸ்கியைக்கொல்ல ஏற்பாடு செய்தவர் மேஜர்ஜெனறல் ஐற்றிகன் என்று ஆளின்பெயரையும்இவர்குறிப்பிட்டார். "ருஷியாவில் தெய்வபக்தி உள்ளவர்கள் கோடிக்கணக்கிலே இருக்கிறார்கள்" என்று உணர்ச்சிவயத்தவராகிக் கம்மியகுரலில் இவர்கூறினர்.

ருஷியாவில் சமயவழிபாட்டுத்தடை சற்றே தளர்த்தப்பட்டிருப்பினும், பொறுப்பானபதவிகளில் இருப்போர் ஆலயத்துக்குப்போனால் அத்தோடு தொலைந்தது அவர்களுடையபதவியும், ஆயுளும் என்றநிலைமை கம்யூனிஸ்த ஆட்சியில் இன்னும் மாறாமலே இருக்கிறது என்பதைத் திரு. கோக்கிலோ சந்தேகத்துக்கு இடமில்லாது தெளிவாக எடுத்துக்கூறினர். சோவியற் இரகசியப்பொலிஸ்தலைவர் பேறியாவின் மார்பில் அவர் 'வளர்த்தகடாவே' பாய்ந்ததென்றார். ஏனெனில், "அவருக்கு அடுத்தபடியாயிருந்த கேர்ணல் மிர்கோஸ்கி போனவருடம்ஆனி 25-ந் திகதி திடீரென்று ஆபீசுக்குள் நுழைந்து பேறியாவைக் கைதுசெய்தார். இந்தவிஷயம் இரண்டு மூன்று நாள்வரை ஒருசிலரைத்தவிர வேறு யாருக்கும்தெரியாது." பேறியாவைத் தூக்கிலிட்டுவிட்டதாகச் சென்ற மார்கழி 14-ந்திகதியன்று மஸ்கோ அறிவித்தது.

## சந்திரனில் தோன்றியஇருள்

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பதுஆண்டுகளுள் திவ்வியநற்கருணைத் திருநாளைப் பாப்பரசர்ஏற்படுத்தி அது உலகமெங்கும் கொண்டாடப்பட ஆஞ்ஞாபித்தார் ஆண்டவரின் விருப்பம் நிறைவேறியது. இப்பொழுதுபரிசுத்த திருச்சபையின் மிகஅழகிய திருநாட்களில்ஒன்று திவ்வியநற்கருணைத்திருநாள்.

## அர்ச். அந்தோனியார் கோவில் — மானிப்பாய்

மானிப்பாயிலே வழமையாகக் கொண்டாடப்படும் அர்ச். அந்தோனியாரின்திருநாளுக்கு ஆயத்தமான நோவனைகள் இந்தஆனிமாதம் 11-ந் திகதி வெள்ளிக்கிழமைமுதல் தினமும் மாலை 7 மணிக்கு ஆரம்பமாகும்.

19-ந் திகதி சனிக்கிழமை கடைசி நோவனையின்போது மாலை 7 மணிக்கு மகாவந். ஜே. எ கியோமார்ஆண்டவர் வேஸ்பர்பாடுவார்.

திருநாளாகிய 20-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்குத் தனிப்பூசை. 7-30 மணிக்குப் பாடற்பூசை. அதன்மேல் அர்ச். அந்தோனியாரின் திருச்சுரூப சுற்றுப்பிரகாரம் நடந்தேறும். யாத்திரையாக வருகிறவர்கள் தங்குவதற்கான வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன. பக்தர்கள் வழமைபோலத் திரளாகவந்து சமூகமளிப்பார்களாக!

காணிக்கைப்பணம் பின்வரும் விலாசத்துக்கு அனுப்பவும்.

ஜி. ரீ. பால்சுந்தரம் சுவாமியார்,
O. M. I.
அர்ச். அந்தோனியார் கோவில்,
மானிப்பாய்.

## அர்ச். அந்தோனியார் திருநாள்

ஊர்காவற்றுறையிலே கோவில் கொண்டிருக்கும் அர்ச். அந்தோனியார்திருநாள் வழமைப்பிரகாரம் சென்ற 13-6-54 ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்பட்டது. திருநாளுக்கு ஆயத்தமான நோவனைகள் 1-6-54 செவ்வாயன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாயின. 12-ந் திகதியன்று காலை வாத்தியவரிசைகளுடன் மேலாசனத்திலிருந்த கோடியற்புதரின் திருச்சுரூபம் மிகவும் பூச்சியமாக இறக்கப்பெற்றுப் பக்தர்களின் வணக்கத்திற்காக வைக்கப்பட்டது. அன்றுநடுப்பகல் அன்னதானம் வழங்கப்பட்டது. மாலை 7 மணியளவில் மாலைஆராதனை ஆரம்பமாகியது. மின்சாரதீபங்களினாலும், நறுமணங்கமழும் புஷ்பங்களினாலும் அலங்கரிக்கப்பட்ட பலிபீடம் அன்று ஓர் புதிய தோற்றம் அளித்தது. 8 மணியளவில் வேஸ்பர்பாடப்பட்டது. 13-ந் திகதி காலை 6 மணிக்குத் திருநாள்பூசை நடந்தேறியது. அன்றுபிற்பகல் 4 மணியளவில் கோடியற்புதரின் திருச்சுரூபம் அலங்கரிக்கப்பட்டிருந்த வீதிவழியே ஊர்வலமாகக்கொண்டுசெல்லப்பட்டுக் கோவிலையடைந்ததும் திருச்சுரூப ஆசீர்வாதம் வழங்கப்பெற்று அதன்பின் அர்ச். அந்தோனியாரின் திருப்பண்டம் முத்திசெய்யக் கொடுபட்டது.

— எஸ். லீனஸ்



## எங்களிடம்

| | ரூ. சத. |
|---|---|
| புதுத்தியானங்கள் (அனுதின தியானக்குறிப்புகள்) | ...15-00 |
| சத்தியவேத சித்திரவிளக்கம் | ... 5-50 |
| புதியஏற்பாடு (பெரிது) | ... 8-50 |
| ,, (சிறிது) | ... 3-75 |
| ஞானோபதேசக் கோர்வை (மூன்று பாகங்களும்) | ... 9-75 |
| சத்திய வேதாகம சங்ஷேபம் பழையஏற்பாடு & புதியஏற்பாடு | 1-00 |
| அர்ச். லூக்காஸ் சுவிசேஷம் | ... 1-00 |
| திருப்பாடுகளின்மேல் தியானம் | ... 1-25 |
| கிறீஸ்துநாதர் அனுசாரம் | ... 3-50 |
| வாழ்க்கையில் வழிகாட்டி | ... 2-75 |
| யேசுநாதர் | 2-75 / 3-90 |
| அன்பின் அழைப்பு | ... 2-75 |
| அன்பின் அனல் | ... 45 |
| அன்பின் அரசர் | ... 2-00 |
| கத்தோலிக்கு களஞ்சியம் | ... |
| மன்ரேசா | ... 3-00 |
| அர்ச்சியசிஷ்டவாரம் | ... 1-00 |
| ஞானசீவியம | ... 3-00 |
| கிறீஸ்துநாதர் எங்கள் கர்த்தா | ... 1-00 |
| பிரதான மந்திரங்களின் வியாக்கியானம் | ... 2-25 |
| என்பலி (சங்கீதத்துடன்) | ... 1-25 |
| மரியாயின் மைந்தர் பொக்ஷம் | 2-50 / 2-00 / 1-50 |
| மரியாயின் வல்லபம் | ... 3-25 |
| கற்பு என் பொக்ஷம் | ... 50 |
| தேவமாதாவின் அமலோற்பவ மகிமை | ... 50 |
| குருக்களுக்காக ஜெபிப்பதேன் | ... 25 |
| புதுநன்மை பாடத்திட்டம் | ... 90 |
| திருக்குடும்ப பக்திமாலை | ... 3-00 |
| பத்தாம் பத்திநாதர் | ... 2-60 |
| திருஇருதய வணக்கமாதம் | ... 2-00 |
| சூசையப்பர் வணக்கமாதம் | ... 2-00 |
| திருஇருதய நவநாள் | ... 25 |
| உத்தரிக்கிற ஆத்துமங்களுக்கு உதவி நவநாள் | ... 35 |
| உத்தரிக்கிற ஆத்துமாக்களின் வணக்க மாதம் | ... 1-65 |
| திருஇருதயநண்பர்களுக்குத் திருமணி | ... |
| சனிக்கிழமைப் புதுமை | ... 2-00 |
| தாழ்ச்சிக் கண்ணாடி | ... 50 |
| துறவற சல்லாபம் | ... 1-00 |

* * *

**கத்தோலிக்க சரிதைகளும், நாவல்களும்**

| | |
|---|---|
| யேசு திருச்சரிதை | ... 1-00 |
| யேசுவின்சிறிய புஷ்பம் | ... 1-10 |
| அர்ச். சூசையப்பர் | ... 55 |
| அர்ச். அருளானந்தர் | ... 2-00 |
| அர்ச். ஞானப்பிரகாசியார் சரித்திரம் | ... 1-10 |
| புதுமைவள்ளல் புனித அந்தோனியார் | ... 45 |
| தொன் பொஸ்கோ சரித்திரம் | ... |
| பிரதாப முதலியார் சரித்திரம் | ... 3-90 |
| பிரதாப முதலியார் சரித்திரம் சிறுவர், பதிப்பு | ... 2-00 |
| பங்கிராஸ் | ... 3-50 |
| இரத்தம்வடிந்த லீலி | ... 75 |
| இன்பத்திலும் துன்பத்திலும் | ... 2-00 |
| திக்கற்ற தையல் | ... 2-00 |
| துப்பாக்கி முனையில் | ... 1-00 |
| மலரோ மணமோ | ... 2-60 |
| லீலிமலர் (அல்லது)கற்பெனும் பரிசுத்த புண்ணியம் | ... 1-55 |
| கேரளநாட்டின் கமலம்(சகோதரி அல்போன்சா) | ... 3-20 |

**இவைகள் வருவிக்கப்பெற்றுத் தற்போது விற்பனைக்குத் தயாராய் இருக்கின்றன.**

- தபாற்செலவு பிரத்தியேகம்.
- புஸ்தகப் பெறும்தியின் அரைவாசிப்பணம்அனுப்பாத வி.பி.பி. கவனிக்கப்படமாட்டாது.

## அர்ச். அந்தோனியார் திருநாள்

ஊறணியிலே கோவில்கொண்டிருக்கும் அற்புதவரத்தரான அர்ச். அந்தோனியார்திருநாள் சென்ற 13-6-54 ஞாயிறுவாரம் பக்திச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. நவதினவிழாக்களெல்லாம் கவிகள், திரைப்பாட்டுகள், பீரங்கிவெடிகள், வாணவேடிக்கைகள் ஆகியனவின்றிச் செபமாலை, பிரசங்கம், திருஇருதயப்பிரார்த்தனை, திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதத்துடன் பக்திப்பரவசமாக நடந்தேறின. திருநாளுக்கு முதனாள் பலஊர்களிலுமிருந்து பெருந்திரளான பக்தர்கள்வந்து குழுமியிருக்க வேஸ்பர்பாடப்பட்டது. திருநாட்பூசைகளின்போது பெருந்தொகையானோர் திருவிருந்துப் பந்தியமர்ந்தனர். சாயந்தரம் பெரியவிருந்துடன் திருநாள் நிறைவாயிற்று.

— நிருபர்

### நன்றியறிந்த தோத்திரங்கள்

யேசுவின் திருஇருதயத்தின் இரக்கத்தினாலும், சதாசகாய மாதாவுடையவும், அர்ச். சூசையப்பர், அந்தோனியார், தெரேசம்மாள், மற்றும்சகல அர்ச்சியசிஷ்டர்களுடையவும்மன்றாட்டினாலும்எனக்கு எதிராகத் தொடரப்பட்டிருந்த வழக்கு தள்ளுப்பட்டது. அவர்களின் நாமம் என்றென்றும் புகழப்படுவதாக.

B. G.

* * *

எனதுசகோதரிகள் இருவருக்கும்வந்த திடீர்வருத்தமும், என்துதாய்க்கு விஷக்கடியால் ஏற்பட்டவருத்தமும் சதாசகாயமாதாவின் அருளாலும், அர்ச்சியசிஷ்டர்களின் மன்றாட்டினாலும் அற்புதவிதமாய்க் குணமடைந்தன. சருவேசுரனுக்குத் தோத்திரமும், அர்ச்சியசிஷ்டர்களுக்குப் புகழ்ச்சியும் உண்டாவதாக. நேர்த்தியின்படி இதனைப்பிரசுரிக்கிறேன்.

ஊர்காவற்றுறை, ...

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Chambers, Main Street, Jaffna, on Thursday, June 17-1954

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org